விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 278 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 06 சனிக்கிழமை (23.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அமைதியான அஞ்சலிக்கு தடை விதிக்க முடியாது

### பருத்தித்துறை பொலிஸாரின் மனு நீதிமன்றால் நிராகரிப்பு

(பருத்தித்துறை) அமைதியான அஞ்சலி நிகழ்வை தடுக்க முடியாது எனத் தெரிவித்து, தியாக தீபம் திலீபனின் நினைவு நாள் நிகழ்வுகளை தடை செய்யக்கோரி பருத்தித்துறை பொலிஸார் தாக்கல் செய்த மனுவை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது. (15ஆம் பக்கம் பார்க்க)

## திலீபனின் வரலாற்று ஆவணக் காட்சியகம்

### நல்லூரில் நேற்று திறப்பு




04

## இணைய மோசடிகள் அதிகரிப்பு

(கொழும்பு)
இணையம் ஊடாக இடம்பெறும் மோசடிகள் அதிகரித்து வருவதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் தெரிவித்துள்ளது.
கடந்த மாதத்தில் 15

## பால்மாவுக்கான வரி அதிகரிப்பு


(கொழும்பு)
இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி 10 சதவீதத்தால் அதிகரிக்கப்படுவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
இந்த வரி அதிகரிப்பு நேற்று முதல் 15

## 'தியாக தீபம்' திலீபனின்

# நினைவேந்தலை தடுக்க முடியாது

(யாழ்ப்பாணம்)


- கொழும்பிலிருந்து வந்த குழு மனுத் தாக்கல்.
- நினைவேந்தலுக்கு தடைவிதிக்க யாழ். நீதிமன்றம் மீண்டும் மறுப்பு.
- அஞ்சலியை தடுக்க தொடர்ந்து மனுத்தாக்கல் அனைத்தையும் நிராகரித்தது நீதிமன்றம்.



(15ஆம் பக்கம் பார்க்க)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு மைத்திரியும் ரணிலுமே பொறுப்பு

### அநுரகுமார திஸாநாயக்க



(கொழும்பு)
ஈஸ்டர் தாக்குதலுக்கான பொறுப்பை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஏற்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.
பாராளுமன்றத்தில் 15

## வவுனியாவில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(வவுனியா)
வவுனியா ஏ9 வீதியில் பறண்நட்டகல் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது.



15

## ஐ.நா செயலாளருடன் ஜனாதிபதி சந்திப்பு



(நியூயோர்க்)
ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்டரஸுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடை 15

### திலீபனுக்கு அஞ்சலி

## சிவாஜிலிங்கத்துக்கு குற்றப் பத்திரிகை

(யாழ்ப்பாணம்)
2020ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்ததமை அல்லது பங்குபற்றி 04

## துப்பாக்கிச் சூடு இதுவரை 44 பேர் பலி

(கொழும்பு)
இந்த வருடத்தில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 44 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 02 . 1947

இறப்பு 15 . 09 . 2023

# இளையதம்பி செல்லத்துரை

## (முன்னாள் உரிமையாளர் VMT மரக்காலை, அரிசி ஆலை)

புலோப்பளை பளையைப் பிறப்பிடமாகவும் கனடா Scarboroughஐ வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி செல்லத்துரை VMT அவர்கள் கடந்த 15.09.2023 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் அருணாசலம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆனந்தலெட்சுமியின் (கிளி) அன்புக் கணவரும் குகதாஸ் (லண்டன்), மோகனதாஸ் (லண்டன்), சசிகலா (சுவிஸ்), வனஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகேஸ்வரி (யோகம்), கலாநந்தினி (நந்தினி), சாந்தகுமார், உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்லம்மா, இராசம்மா, கந்தசாமி, காலஞ்சென்ற கனகரத்தினம், தர்மலிங்கம் (தருமு), தியாகராசா (கிளி), இராசேந்திரம் (ராசா), வேலாயுதப்பிள்ளை (சிவம்), சுந்தரலிங்கம் (சுந்தரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற வாரித்தம்பி, தம்பிமுத்து மற்றும் தங்கரத்தினம், சரஸ்வதி, சறோஜாதேவி (சறோ), தவமலர், முத்துலட்சுமி, புனிதமலர், சறோஜாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சரணிகா, ஆகாஸ், ஆதீஸ், வனஜன், விவீசன், லம்மியா, அஷ்வின், த்ரிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.09.2023 ஞாயிற்றுக்கிழமை கனடா நேரப்படி 8.00 AM - 11.00 AM 384 Finley Ave, Ajax Orulis 2E3, Canadaவில் நடைபெறும்.

அதேநேரம் அவரது அஞ்சலி அவரது பூர்வீக இடமான புலோப்பளையில் 8.00 AM - 2.00 PM வரை அவரது சகோதரரான இராசேந்திரம் (ராசா) அவர்களின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலோப்பளை,
பளை.

மேலதிக தகவல்களுக்கு:-
இராசேந்திரம் (ராசா) - 077 412 4430
சிவம் - 077 738 6892
தியாகராசா (கிளி) - 077 434 6417
வனஜா, உதயகுமார் (கனடா) - 0014168066527

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில் ஐ.நாவுக்கு வருவது ஐ.நாவுக்கு அவமானம்


# ரணிலின் வருகையை எதிர்த்து

# நியூயோர்க்கில் எதிர்ப்புப் போராட்டம்

**(நியூயோர்க்)**

**ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடர் நியூயோர்க்கில் நடந்துவரும் நிலையில் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் காரணம் என வலியுறுத்தி நியூயோர்க்கில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் பிரதமர் விஸ்வநாதன் உருத்திரகுமாரனின் தலைமையில் நேற்று முன்தினம் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் மிகவும் ஆக்ரோசமாக ரணிலே வெளியேறு, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே?, சிங்கள தேசமே இனப்படுகொலை செய்தது, ரணில் ஐ.நாவுக்கு வருவது ஐ.நாவுக்கு அவமானம், இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்து, தியாகி திலீபனின் ஊர்தியை சிங்கக் கொடி கொண்டு அடித்து நொருக்கிய சிங்கள பௌத்த இனவெறி அரசு, ரணில் அரசு போன்ற முழக்கங்கள் போராட்டக்காரர்களால் உரத்து ஒலித்தது.

பிரதமர் உருத்திரகுமாரன் கருத்து தெரிவிக்கையில், நிரந்தர அரசியல் தீர்வுக்கு பொது வாக்கெடுப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்ததுடன், இலங்கையின் உண்மைக்கும் நீதிக்குமான ஆணைக்குழு தமிழர்களை ஏமாற்றுவதற்கான சதித்திட்டமே என்றும் பௌத்த மயமாக்கல், சிங்களக் குடியேற்றம் ஆகியவற்றில் ஐ. நா தலையிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். (நி-5)

# இலங்கையின் நல்லிணக்கத்திற்கு ஐ.நா ஆதரவு வழங்கும்

### ஐ.நா உறுதியளிப்பு

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் இற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. நாட்டின் பொருளாதார நிலைமை உள்ளிட்ட உள்நாட்டு விவகாரங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அத்துடன் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு ஐ.நா தொடர்ச்சியாக ஆதரவு வழங்கும் எனவும் உறுதியளித்துள்ளார். (நி-5)

# இந்தியப் பொருளாதார மண்டலத்தை நோட்டமிடும் சீன ஆய்வுக் கப்பல்

### சர்வதேச புலனாய்வு தகவல்கள் தெரிவிப்பு

(டில்லி)

சீனாவின் Shi Yan 6 ஆய்வுக் கப்பல் தற்போது இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்கு அருகில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு வருவதாக சர்வதேச புலனாய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த தகவல்களுக்கு அமைய நேற்று முன்தினம் முதல் சீனக் கப்பல் இந்தியாவிற்கு சொந்தமான நிக்கோபார் தீவுகளுக்கு அருகில் மிகக் குறைந்த வேகத்தில் பயணிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மலாக்கா ஜலசந்தி வழியாக இந்தியப் பெருங்கடலுக்குள் நேற்று முன்தினம் காலை நுழைந்த Shi Yan 6 கப்பலை நிக்கோபார் தீவுகள் அருகே அவதானிக்க முடிந்தது என சர்வதேச கப்பல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் நங்கூரமிடப்பட்டிருந்த குறித்த கப்பல், நேற்று முன்தினம் மாலை வங்காள விரிகுடாவை நோக்கி திரும்பிய நிலையில், நிக்கோபார் தீவுகளுக்கு உரிமம் கோருகின்ற இந்தியாவிற்கு சொந்தமான பிரத்தியேக பொருளாதார மண்டலத்தின் கடல் எல்லையை அண்மித்து தமது பயணத்தை மெதுவாக முன்னெடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், சீனாவின் புதிய பாதையை அவதானிக்கும் போது, Ninety East Ridge எனப்படும் கடலின் அடிவாரத்திலுள்ள மலைத்தொடரின் மேற்பரப்பில் பயணிப்பதாக கூறப்படுகிறது.

இதற்கு முன்னர் இலங்கை வந்த, YUAN WANG 5 கப்பல் ஊடாகவும் Yen Hong எனும் செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பலையும் பயன்படுத்தி குறித்த பகுதிகளில் சீனா கடந்த மூன்று ஆண்டுகளாக ஆய்வுகளை நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

இதனிடையே, கடந்த இரண்டு தசாப்தங்களில் இந்தியாவும் அமெரிக்காவும் கடலுக்குள் உள்ள மலைகளைப் பற்றி பல ஆய்வுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கடன் வட்டி வீதம் குறைப்பு-பதில் நிதியமைச்சர்

(கொழும்பு)

கடந்த 2022 ஆம் ஆண்டு 15.5 சதவீதமாக இருந்த கடன் வட்டி வீதத்தை, இந்த ஆண்டு 12 சதவீதம் வரை குறைக்க முடிந்துள்ளதாகவும்14 சதவீதமாக இருந்த வங்கி வைப்பு வட்டி வீதம் தற்போது 11 சதவீதமாக குறைந்துள்ளதாக பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல்வேறு புதிய சீர்திருத்தங்களுடன் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னெடுத்து வரும் வலுவான வேலைத்திட்டத்தின் காரணமாக, கடந்த ஒரு வருடத்தில் நாட்டில் பணவீக்கம் 62.1 சதவீதத்தினால் குறைந்துள்ளது.

2022ஆம் ஆண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் 66.7 சதவீதமாக இருந்த பணவீக்கத்தை 2023 ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் 4.6 சதவீதம் வரை, குறைக்க முடிந்துள்ளது.

அத்துடன் 1.8 பில்லியன் டொலர்களாக இருந்த நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பை, கடந்த ஓராண்டில், 3.8 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதற்கு முடிந்துள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

சேவை நலன் பாராட்டும்
மணிவிழா வாழ்த்தும்

திரு. நந்தகோபாலசிங்கம் இராமச்சந்திரன்
(SLTS-I) சிறப்புப் பட்டதாரி – வரலாறு
(அகில இலங்கை சமாதான நீதவான்)

1994-2004 வரை முல்லை வலயத்தின் ஆசிரியராகவும்
2005-2011 வரை மடுவலயத்தில் இலுப்பைக் கடவை மகா வித்தியாலய அதிபராகவும்
2012-2023 வரை முல்லை வலயத்தின் ஆசிரியராகவும்
(09.01.2020-23.09.2023 வரை மு/ புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம்) கடமையாற்றி இன்று 23.09.2023 சனிக்கிழமை ஓய்வு பெறும் எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes



(A-7304)

வாழ்த்துவோர்– பாடசாலைச் சமூகம்.மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவாஜி...

யமை தொடர்பில் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங் கத்திற்கு, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டது.

எம்.கே.சிவாஜிலிங்கம் மீது பயங்கர வாத தடைச்சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக் கில் நேற்று முன்னிலையாகியபோது, குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி ஆதித்ய படபாண்டிகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை நேற்று சிவாஜிலிங்கத்திடம் கையளிக் கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 27வது பிரிவின் கீழ், தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினரான திலீபன் என்ற இராசையா பார்த்தீபனின் 33வது ஆண்டு நினைவேந்தல் நிக ழ்வை 2020 செப்டெம்பர் 15ஆம் திகதி மற்றும் அதற்கு அடுத்த நாள் யாழ்ப் பாணம் கோண்டாவில் கோகுல வீதியில் நடத்தினார் என்றும், 2011 ஓகஸ்ட் 29ஆம் திகதி விடுதலைப் புலிகளை தடை செய் வதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விதி களை மீறியதாகவும் குற்றம் சுமத்தப்பட்ட சிவாஜிலிங்கத்திற்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய் திருந்தார்.

2022ஆம் ஆண்டு சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்தார். இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட 7 தவ ணைகளில் எம்.கே.சிவாஜிலிங்கம் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்க வில்லை. அவர் இந்தியாவில் மருத்துவ சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ சான் றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. கடந்த ஓகஸ்ட் 25ஆம் திகதி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்ட போது, குற்றஞ்சாட்டப்பட்ட சிவாஜி லிங்கம் நீதிமன்றில் ஆஜராகாத காரணத் தினால் அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிபிடியாணை பிறப்பித் திருந்தார்.

இந்த நிலையில், சட்டத்தரணி உதார முஹந்திரத்தின் ஆலோசனையின் பேரில், ஜனாதிபதியின் சட்டத்தரணி றியன்சி அரசகுலரத்ன, இரட்ணவேல் ஊடாக சிவா ஜிலிங்கம் நேற்று நீதிமன்றில் முன்னி லையானார். தமது கட்சிக்காரர் மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா சென்றுள்ளதாக வும், இது குறித்து அறிந்த பின்னர் அவர் இன்று (நேற்று) நீதிமன்றத்தில் ஆஜராகி யதாகவும் அவரது சட்டத்தரணிகள் தெரி வித்துள்ளனர். சிவாஜிலிங்கத்தின் உடல் நிலையை கருத்தில் கொண்டு அவரை பிணையில் விடுவிக்க வேண்டுமென்றும், அவரை விளக்கம றியலில் வைப்பது அவரது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத் தக்கூடும் என்றும் சுட்டிக்காட்டிய சட்டத் தரணிகள், பயங்கர வாத தடைச்சட் டத்தின் ஏற்பாடுகளின் கீழ், மேல் நீதிமன்ற நீதிபதி தனக்குள்ள அதிகாரத் தின்படி, பிணை வழங்க வேண்டுமென கோரிக்கைவிடுத்தனர். முன்வைக்கப்பட்ட அனைத்தையும் பரிசீலித்த உயர்நீதி மன்ற நீதிபதி, தலா 10 இலட்சம் ரூபா பெறு மதியான இரண்டு சரீரப் பிணைகளில் சிவா ஜிலிங்கத்தை விடுவிக்க உத்தரவிட்டார்.

பின்னர் இந்த வழக்கை ஒக்டோபர் 20 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்கு மாறு உத்தரவிடப்பட்டது.

சிவாஜிலிங்கத்தை கைது செய்த போது கைப்பற்றிய வாழைக்குற்றி, கற்பூரம் உள் ளிட்ட பொருட்களை பொலிஸார் சான்றுப் பொருட்களாக குறிப்பிட்டிருந்தனர்.

(ம-7.33,104)


# கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக முல்லைத்தீவு நண்பர்களான தயாபரன் மற்றும் சாந்தி ஆகியோரின் அன்புத் தாயார்

அமரர் **அருணாசலம் சுந்தராம்பாள்**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இறுதிக்கிரியைகள் 24.09.2023 ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணியளவில் 6th Lane, Lower Street, Orrs hill Trinco, எனும் முகவரியில் நடைபெறும்

பிரிவால் துயருறும்

1989/ 90 யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவ நண்பர்கள்

(C-7309)



# மரண அறிவித்தல்

## திருமதி
## கண்மணி இராசையா

நவாலியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை வடக்கு சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி இராசையா அவர்கள் 22.09.2023 வெள்ளிக்கிழமை காலை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பி இராசையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற மூத்ததம்பி - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகளும் பிரேமிளா(ராணி), நிர்மலா(ராசா), காலஞ்சென்ற கமலா, காலஞ்சென்ற முருகானந்தன், யோகானந்தன், ரேவதி பமிலா(தங்கா), காலஞ்சென்ற கணேசானந்தன், தேவமலர்(அம்மன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வராசா, மகேந்திரன், காலஞ்சென்ற ஜெயராசா, ரேணுகாதேவி, கனகராசா மற்றும் துரைராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிற்றம்பலம் அவர்களின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.09.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் பிரசாந் வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாயில் உள்ள அவரது மூத்த மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 324 3139

தகவல் :
குடும்பத்தினர்

(17198)


## தீலிபனின்...

தியாக தீபம் திலீபனின் வரலாற்றினை எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் முகமாக அவரின் வரலாற்றினை எடுத்தியம்பும் "பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!!" எனும் தொனிப்பொருளுடன் கூடிய ஆவணக் காட்சியகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயம் முன்றலில் நேற்று மாலை மாவீரரின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.

6.30 மணியளவில் தியாக தீபம் திலீப னின் பிரதான தூபி முன்றலில் மலரஞ்சலி செலுத்தி ஆரம்பமாகியதுடன் பின் வர லாற்று ஆவணக் காட்சியகத்தை மூன்று மாவீரர்களின் தாய் சுடரேற்றி ஆரம்பித்து வைத்தார்.

தியாக தீபம் திலீபனின் வரலாற்று புகைப்படங்கள் என்பன தொகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர்கள், அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண் டனர்.

(ம-7.33.104)

# 33 வருடங்களுக்கு பின் கட்டுவனில் பூசை வழிபாடு



(யாழ்ப்பாணம்)

33 வருடங்களுக்கு பின்னர் கட்டுவன் காசியம்பாள் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தினை சென்று பார்வையிடுவத ற்கும் ஆலய வழிபாட்டிற்கும் இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கட்டுவன் காசியம்மாள் அம்மன் ஆலய தேவஸ்தானத்தினராலும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசிய கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரனிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக விஜயகலா மகேஸ்வரன் எடுத்த முயற்சியின் பயனாகவும் குறித்த ஆலயத்தினை சென்று பார்வையிடுவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்த நிலையில் நேற்று மாலை இராணுவத்தினரின் அனுமதியுடன் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள குறித்த ஆலயத்தினை ஆலய பூசகர்கள் சென்று பார்வையிட்டதோடு ஆலயத்தில் பூசை வழிபாடுகளும் குருமார்களினால் முன்னெடுக்கப்பட்டது.

(ம-7.33)





"பிராண சிகிச்சை" பாட விளக்கமும் செய்முறைப் பயிற்சியும்




THERE IS A SOLUTION FOR THESE AILMENTS



பயிற்சியை நிறைவு செய்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
Date: 21.09.2023 to 27.09.2023 Time: 6.00pm to 8.00pm
23.09.2023 , 24.09.2023 (Sat & Sundays) 8Am to 12 noon
இடம்: அகில இலங்கை இந்துமாமன்றம் நல்லூர், கேட்போர்கூடம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
ரெய்கிமாஸ்டர் ஸ்ரீநந்தகுமார் :763855031
யோகாமாஸ்டர் அச்சுதராஜா :777607026

(17201)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரக்குறைவான பூச்சி கொல்லிகளை வழங்கும் நிறுவனங்களின் உரிமம் ரத்து

## விவசாய அமைச்சர் எச்சரிக்கை



(கொழும்பு)

தரக்குறைவான பூச்சி கொல்லி மருந்துகளை வழங்கும் நிறுவனங்களின் உரிமம் இரத்துச் செய்யப்பட்டு அந்த நிறுவனங்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாயிகளிற்கு வழங்கப்படும் பூச்சி கொல்லி மருந்துகள் தரமானவையாக இருக்க வேண்டும் எனவும் அதன் தரம் குறைவாக இருக்கும் பட்சத்தில் அந்த நிறுவனங்களிற்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கைத் தேசிய விவசாயிகள் அமைப்புகளின் மாவட்டத் தலைவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளைத் தொடர்ந்து அமைச்சரினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சில நிறுவனங்கள் தரமானவை எனக்கூறப்பட்டு அதிக விலைக்கு கொடுக்கப்படும் பூச்சி கொல்லி மருந்துகள், களை கட்டுப்பாடு மற்றும் பூச்சி கட்டுப்பாடு மருந்துகள் போன்றவை சரியான பலனை தருவதில்லை என்றும் அவை தரக்குறைவானவை என்றும் அவர்கள் அமைச்சரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

ஏதேனும் ஒரு நிறுவனத்தால் விற்கப்படும் பூச்சி கொல்லி மருந்துகளின் தரம் குறைவாக இருப்பதாக உணர்ந்தால் உடனடியாக விவசாய அமைச்சகம், விவசாயத்துறை மற்றும் பூச்சிக் கட்டுப்பாட்டுச் செயலகத்துக்குத் தெரியப்படுத்துமாறு விவசாயிகளுக்கும் விவசாய அமைப்புகளிற்கும் இதன் போது அமைச்சர் அறிவுறுத்தினார்.

இதற்கு மாற்றீடாக விவசாய சேவை நிலையங்களில் இருந்து பூச்சி கொல்லி மருந்துகளை விநியோகிக்கும் முறையினை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன் வாயிலாக விவசாயிகளுக்கு விவசாய சேவை நிலையங்களில் இருந்து உயர்தர பூச்சிக் கொல்லி மருந்துகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## போருக்கு மத்தியிலும்

# இலங்கை உட்பட பல நாடுகளுக்கு கைகொடுத்த உக்ரைன்- ஜெலன்ஸ்கி

(கீவ்)

ரஷ்யாவின் கடல் முற்றுகை இருந்த போதிலும் இலங்கை உள்ளிட்ட பிற நாடுகளுக்கு தானியங்களை வழங்கியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

அதேவேளை அல்ஜீரியா, ஜிபூட்டி, எகிப்து, கென்யா, லிபியா, லெபனான் மொரோக்கோ, சோமாலியா, துனிசியா, பங்களாதேஷ், சீனா, இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, வியட்நாம், ஈராக், ஓமன், பாகிஸ்தான், துர்கியே மற்றும் ஏமன் ஆகிய நாடுகளையும் உக்ரைன் ஜனாதிபதி பெயரிட்டுள்ளார்.

“எங்கள் தயாரிப்புகள் துறைமுகங்கள் வழியாக எத்தியோப்பியா மற்றும் சூடானை அடைந்துள்ளன. மொத்தமாக 32 மில்லியன் தொன் உணவு வழங்கியுள்ளோம் என தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உக்ரைனின் ஏற்றுமதித் திட்டங்கள், கருங்கடல் தானிய முயற்சிகளுக்கு ஆதரவளித்த அனைத்து தலைவர்களுக்கும் ஜனாதிபதி நன்றி கூறினார்.

“ஒன்றாகச் செயற்பட்டால் இன்னும் பலவற்றைச் சாதிக்கலாம். உலகளாவிய உணவு நெருக்கடியைத் தணிக்க உக்ரைன் மிகவும் உறுதியான நடவடிக்கைகளை முன்மொழிகிறது.” என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 14 . 02 . 1944



இறப்பு 21 . 09 . 2023

**அமரர்.திருமதி சின்னபிள்ளை சின்னத்தம்பி**

எமது பாடசாலையின் ஆசிரியர் திரு.சி.கங்காதரன் அவர்களின் தாயார் திருமதி.**சின்னபிள்ளை சின்னத்தம்பி** அவர்கள் 2023.09.21 அன்று இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். [17181]

பாடசாலைச் சமூகம், யா/ செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலை.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திரு.சின்னத்தம்பி லோகேந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர்.**சின்னத்தம்பி சின்னப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (அ-7306)

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

## நோயாளர் பராமரிப்பு சேவைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர் நலன்புரிச் சங்க பராமரிப்பு சேவைக்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கோ அல்லது நேரில் வந்தோ உங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை 10.10.2023 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (7188)

அனுப்ப வேண்டிய முகவரி- நோயாளர் நலன்புரிச் சங்கம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல- 076 100 0046

# இராசிபலன்

23.09.2023
புரட்டாதி 06 , சனிக்கிழமை
அட்டமி முற்பகல் 8.07 மணிவரை
மூலம் முற்பகல் 11.49 மணிவரை

சுபநேரம் -3.02-4.32 மணிவரை
இராகுகாலம்-9.02-10.32 மணிவரை
அட்டமி- நவமி

சந்திராஷ்டமம்- ரோகிணி,மிருகசீரிடம்.

**வளவன்**

**மேஷம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**கடகம்** உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், எடுத்த காரியத்தை நிறைவேற்ற உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**ரிஷபம்** மனக்குழப்பம் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பிரயாண பயமுண்டு.

**சிம்மம்** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**விருச்சிகம்** நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தனவரவு திருப்திகரமாக அமையும், உறவினர் வருகையுண்டு, வாக்கு மேன்மையுண்டு

**கும்பம்** பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், காரிய அனுகூலமுண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் எண்ணம் உருவாகும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

தகுதியற்றவர்களைப்பார்த்து இரங்காதே. அது உனக்கு கேடு விளைவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 25,000 வீடுகள் வழங்கத் தீர்மானம்

## வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்

(யாழ்ப்பாணம்)

**வடமாகாணத்தில் நிரந்தர வீடுகள் இல்லாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 25,000 நிரந்தர வீடுகளை கட்டிக்கொடுத்து வடக்கில் உள்ள வீட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.**



ஆளுநர் அலுவலகத்தில் வீட்டுத்திட்டம் தொடர்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் குறைந்த வருமானம் கொண்ட நிரந்தர வீடற்ற குடும்பங்களை இனங்கண்டு வீட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு வடமாகாண ஆளுநர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கில் கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத்திட்டங்களில் சுமார் 6000 நிரந்தர வீடுகள் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்க முடியாத நிலையில் உள்ளது.

இந்நிலையில் குறித்த வீட்டுத்திட்டங்களைப் போல வல்லாது இந்த 25,000 வீடமைப்புத் திட்டத்தை தயாரிப்பதில் பணிகள் முடியும் வரை அதிகாரிகள் மிகவும் திட்டமிட்டு சரியான முறையில் செயற்பட வேண்டும்.

மேலும், கடந்த காலங்களில் பகுதியளவு கட்டப்பட்டு கைவிடப்பட்ட வீடுகள், இத்திட்டத்தின் கீழ் பணிகளை முடிப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும் என ஆளுநர் தெரிவித்தார். (5-6-33)

## சைவப் புலவர் சங்க நிர்வாகசபைக் கூட்டம்

(சாவகச்சேரி)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கே.கே.எஸ் வீதி இணுவிலில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது 2024ஆம் ஆண்டிற்கான பரீட்சை தொடர்பான விடயங்கள்,சங்கத்தின் செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் அறிவித்துள்ளார். (5-6-30)

## நாவற்குழியில் உரமானிய பதிவு

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழி விவசாய சம்மேளனப் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கான கால போகக் கூட்டமும் உரமானியப் பதிவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை கைதடி நாவற்குழி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

அனைத்து விவசாயிகளும் அவர்களது தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம் இவ்வருட ஏக்கர் வரி கட்டிய பற்றுச்சீட்டு மற்றும் சந்தாப் பணம் கட்டிய பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு சம்மேளனத் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-6)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆங்கில மன்றம் நடத்திய நூற்றாண்டு கால ஆங்கில தின விழா நேற்று கலாசாலையின் அதிபர் ச. லலீசன் தலைமையில் இடம்பெற்றது.(படம்-சிவசாந்தன்)

## புத்தூர்- நிலாவரை வீதி புனரமைப்பு பணி முன்னெடுப்பு



(கரணவாய்)

புத்தூர்- நிலாவரை வீதி புனரமைப்பு நிறுத்தப்பட்டிருந்த நிலையில் மீண்டும் குறித்த பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாதை ஊடாக பயணம் செல்லும் பயணிகள் பெரும் சிரமத்திற்கு மத்தியில் குறித்த வீதியால் பயணம் மேற்கொண்டு இருந்தனர்.

இவ்வீதியினை புனரமைக்க கோரி பலதரப்பட்ட பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க குறித்த வீதியின் புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (5-6-60)

## நாகர்கோவிலில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் 28 ஆவது நினைவேந்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாகர்கோவில் பாடசாலை மாணவர்கள் படுகொலையின் 28 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை பாடசாலையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், உயிரிழந்தவர்களது உறவினர்கள் மற்றும் பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

1995 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி இலங்கை விமான படையின் புக்காரா விமானம் நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது இரண்டு குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி இருந்தது.



அதில் பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருந்த 21 மாணவர்கள் உள்ளிட்ட 39 பேர் இறந்து போனார்கள்.அத்துடன் 35 இற்கும் அதிகமான மாணவர்கள் உட்பட பலர் படுகாயமடைந்தமைகுறிப்பிடத்தக்கது.(5-6-33)

## வவுனியா - பண்டாரிக்குள வீதியை புனரமைக்க நடவடிக்கை

(குருமன்காடு)

வவுனியா - பண்டாரிக்குளம் பிரதான வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா - பண்டாரிக்குளம் பிரதான வீதி, பண்டாரிக் குளம்- தவசிகுளம் பிரதான வீதி, பண்டாரிக் குளம் - வேப்பங்குளம் பிரதான வீதி என்பவற்றை புனரமைப்பதற்கான கோரிக்கைகள் பல காலமாக முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் கொழும்பில் இருந்து வருகை தந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகள், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கு. திலீபன் உள்ளடங்கிய குழுவினர், கிராம மட்ட அமைப்புக்களுடன் குறித்த வீதியை நேற்று பார்வையிட்டதுடன், அதன் தூரங்களும் அளவீடு செய்யப்பட்டது.

குறித்த வீதி புனரமைப்பு பணிகள் விரைவில் ஆரம்பிப்பதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் இதன்போது தெரிவித்தார். (5-6-250)

## கிளிநொச்சி சந்தை பகுதியில் அளவீட்டு நியமங்களை மீறிய வர்த்தகர்களுக்கு வழக்குப் பதிவு

(தர்மபுரம்)

கிளிநொச்சி மாவட்ட அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கிளிநொச்சி சந்தைப்பகுதியில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

சந்தைப்பகுதியிலுள்ள பல சரக்குக் கடைகள், மரக்கறி சந்தைகள், பழக்கடைகள், தேங்காய் விற்பனை இடங்கள், நகைக் கடை போன்ற இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது அரச அனுமதியற்ற தராசுகள், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினரால் கரைச்சி பிரதேச சபையினரின் ஒத்துழைப்போடு கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், உரிய காலத்தில் அளவீட்டு நியமங்கள் செய்யாத 3 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (5-6-316)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# விசாரணை நடத்திய அதிகாரிகள் 31 பேரை அதிரடியாக இடம் மாற்றிய கோட்டா

### அம்பலப்படுத்திய எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய 31 பேரை கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக இடமாற்றம் செய்தார். இது பொய்யல்ல, இது உண்மை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

கோட்டாபய ராஜபக்ஷ நவம்பர் 18 அன்று ஜனாதிபதியாகிறார். நவம்பர் 22 அன்று பிரதமர் நியமிக்கப்படுகிறார். ஆனால் அதற்கெல்லாம் முதலாக, அதாவது ஜனாதிபதி, பிரதமர் நியமிப்புகளுக்கு முன்னரே ஷானி அபேசேகரவை இடமாற்றுகிறார்.

அமைச்சரவை நியமிப்பிற்கு முன்னர் பிரதமர் நியமிப்பிற்கு முன்னர் ஷானியை மாற்றுகிறார்கள். நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய 31பேரை கோட்டாபய ராஜபக்ஷவின் பரிந்துரையின் கீழ் இடமாற்றம் செய்துள்ளார்கள். இது பொய்யல்ல, உண்மை.

சிஐடி அதிகாரிகள் 700 பேருக்கு வெளிநாடு செல்வதை தடை செய்தார். நான் இவற்றினை சபைக்கு வழங்குகிறேன். இது பாரிய சந்தேகத்திற்குரியது. ஏன் கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு செய்தார்? நாங்கள் அது பற்றி அறிய வேண்டும்.

இதற்குப் பின்னால் உள்ள உண்மைகளை நாம் தெரிந்திருக்க வேண்டும். நான் அப்பட்டமான பொய்களை கூறினால் அதற்கு எதிராக விசாரணைகளை நடத்துங்கள். எனக்கு பயமில்லை. விசாரியுங்கள்.

69 இலட்சத்தில் ஒருவன் என்று சொல்லிக் கொண்டு அவர்களை ஏமாற்றி கைகளில் இரத்தக் கறைகளை படிந்து கொண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளை காப்பாற்ற ஏன் துடிக்கிறீர்கள் எனக் கோருகிறேன். நான் கூறுவதை விசாரியுங்கள்.

மேலும், ஷானி அபேசேகர போன்ற நேர்மையான அதிகாரிக்கு எதிராக பழிவாங்கவே பொய்யான வழக்குகளை அவர் மீது திணித்ததாக அவர் குறிப்பிட்டார். (நி-5)

# பெற்றோல், டீசல் ஏற்றுமதிக்கு தற்காலிக தடை விதித்த ரஷ்யா

(மொஸ்கோ)

பெற்றோல் ,டீசல் ஏற்றுமதிக்கு ரஷ்யா தற்காலிக தடை விதித்துள்ளது. உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ள நிலையில் ரஷ்யா இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

நாட்டின் பொருட்களிற்கான விலை ஏற்றத்தினை குறைப்பதற்காக இந்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இதன் காரணமாக ரஷ்யாவில் உள்நாட்டில் எரிபொருளின் விலை 4 சத வீதத்தினால் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
பெருமையுடன் வழங்கும் சாதாரண மனிதனை முழுமனிதனாக்கும்
மனவளக்கலையின் ஆரம்ப திறனூக்கபயிற்சிகள்

- உடல் நலத்திற்கு ⇒எளியமுறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு ⇒சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- மன அமைதிக்கு ⇒தியானப்பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு ⇒அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட ⇒தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :23.09.2023 சனிக்கிழமை தொடக்கம் 29.09.2023 வெள்ளிக்கிழமை வரை
நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

அறிமுகவுரை :- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி C.ராம்குமாரி அவர்கள் (தமிழ்நாடு இந்தியா )

பயிற்சிகளை வழங்குபவர்கள் :- துணைபேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைபேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா

பயிற்சிகள் காலை 6.00மணி முற்பகல் 10.00மணி மாலை 5.00 மணிக்கு என பயிற்சியாளர்கள் வசதி கருதி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதுடன் vip மற்றும் வைத்தியர்களுக்கு ஆங்கிலத்திலும் கற்றுத்தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல 81 பிறவுன் வீதி கொக்குவில் கிழக்கு கொக்குவில் யாழ்ப்பாணம்
தொ.இல :- 0212222772,0768571395,0771235646,0714403268,0777368745
(17308)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்:ரேவதி
கி.பா: குறைவு
உயரம்: 5' 9
தகைமை/தொழில்: HNDA (Store Keeper)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர். உத்தியோகம் (அரச)
தொ.இ: B/13958

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 60
உயரம்: 6
தகைமை/தொழில்:BSc, ஆசிரியர் (அரச)
எதிர்பார்ப்பு: படித்த. உத்தியோகமுள்ளவர்.
தொ.இ: B/13961

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம் : மிருகசீரிடம் 1 இல் சூரி. செவ்
உயரம்: 5' 7
தகைமை/தொழில் A/L வியாபாரம்
எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்/படித்த பெண்
தொ.இ: B/13962

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ரேவதி 5 இல் சூரி. செவ்
கி.பா: 64
உயரம் : 5' 11
தகைமை/ தொழில்: O/L , மேசன்
எதிர்பார்ப்பு: படித்த. குணமான பெண்
தொ.இ: B/13963

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 35
உயரம்: 5' 5
தகைமை/தொழில்: NDT,BIT (Reading)ஆசிரியர்
எதிர்பார்ப்பு: ஆசிரியரல்லாத பட்டதாரி தகைமை
தொ.இ:G/13943

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 7 இல் செவ்வாய்
கி.பா: 80 1/2
உயரம்: 5' 5
தகைமை/தொழில்:MBBS,Doctor
எதிர்பார்ப்பு: Doctor,IT Engineer
தொ.இ: G/13945

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 39
உயரம்: 5' 4
தகைமை/தொழில்: BSc Engineering, MSc Structural Engineer (Australia)
எதிர்பா்பு; Doctor,Engineer,Australia pr
தொ.இ:G/13949

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 25
உயரம் :5' 2
தகைமை/தொழில்: HNDA, MA விவாகரத்தானவர் மணமகள்.
எதிர்பார்ப்பு: படித்தவர்.விவாகரத்தானவர்
தொ.இ:G/13950

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உறக்கத்தில் இருக்கும் லேண்டர், ரோவரை
# தட்டி எழுப்ப இஸ்ரோ முயற்சி

(டில்லி)

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக கடந்த ஜூலை 14 ஆம் திகதி பகல் 2.35 மணிக்கு எல்.வி.எம்.3 எம்4 ராக்கெட் மூலம் சந்திரயான்-3 விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது. இது புவிவட்டப்பாதை, நிலவு வட்டப்பாதையை கடந்து, ஒகஸ்ட் 23 ஆம் திகதி மாலை 6.04 மணி அளவில் விண்கலத்தில் இருந்த விக்ரம் லேண்டர் 40 நாட்கள் பயணத்தை முடித்து நிலவில் வெற்றிகரமாக தரை இறங்கியது.

அடுத்த 2 மணிநேரத்திற்கு பிறகு விக்ரம் லேண்டரில் இருந்து பிரக்யான் ரோவர் வெளியே வந்தது. இதனை லேண்டர் ஒரு குழந்தையைப் போல் கண்காணித்து வந்தது. ரோவர் வெளியான அந்த நாள், நிலவில் 14 நாட்களுக்கு (ஒரு நிலவு நாள்) பிறகு இரவு முடிந்து, பகல் ஆரம்பித்த நாள். அன்றைய தினமே ரோவர் ஆய்வுப் பணியை தொடங்கியது.

ரோவரில் உள்ள "லிப்ஸ" எனப்படும் "ஸ்பெக்ட்ரோஸ்கோப் கருவி", நிலவில் கந்தகம் இருப்பதை சந்தேகத்திற்கு இடமின்றி உறுதி செய்தது. தொடர்ந்து, அலுமினியம், கல்சியம், இரும்பு, குரோமியம், டைட்டேனியம், மாங்கனீசு, சிலிகான் மற்றும் ஆக்சிஜன் உள்ளிட்ட கனிமங்கள் இருப்பதை ரோவர் உறுதி செய்ததுடன் பல்வேறு கோணங்களில் லேண்டருடன் சேர்ந்து நிலவின் தென் துருவத்தில் மேல்பரப்பில் பல்வேறு புகைப்படங்களையும் எடுத்து பெங்களூரில் உள்ள தரை கட்டுப்பாட்டு மையத்திற்கு அனுப்பி வைத்தது.

தொடர்ந்து நிலவு நாள் முடிவடைந்து அங்கு இரவு தொடங்கியபோது இருள் சூழ்ந்த நிலவின் தென் துருவத்தில் ரோவர் மற்றும் லேண்டரால் ஆய்வுப் பணியில் ஈடுபட முடியவில்லை. இதனால் இம்மாத தொடக்கத்தில் நிலவின் தென் துருவத்தின் மேல்பரப்பில் பிரக்யான் ரோவர் உறக்க நிலையில் வைக்கப்பட்டு உள்ளது.

இதனை தொடர்ந்து லேண்டரும் உறக்க நிலைக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்தநிலையில் நிலவில், முதல் 14 நாட்கள் சூரிய வெளிச்சம் இருந்த போது, ரோவரில் இருந்த பேட்டரிகள் சோலார் தகடுகள் மூலம் சார்ஜ் செய்யப்பட்டு வைக்கப்பட்டு உள்ளது.

இந்தநிலையில் நிலவின் தென் துருவத்தில் சிவசக்தி புள்ளியில் சூரியஒளி படும்போது, அங்கு உறக்கத்தில் உள்ள ரோவர், லேண்டர் கருவிகளின் செயற்பாட்டு நிலைமைகள் மேம்படும். 14 நாட்கள் நீடித்த நிலவு இரவில், சந்திரனின் சுற்றுச்சூழல் சுமார் 200 டிகிரி உறைபனி தட்பவெப்பநிலையால் சூழப்பட்டு இருக்கிறது. இத்தகைய கடுமையான கால நிலையில் தொழில்நுட்ப உபகரணங்கள் வேலை செய்வது சாத்தியமில்லை. ஆகவே தான் விஞ்ஞானிகள் அவற்றை உறக்க நிலைக்கு கொண்டு சென்றனர். இந்த நிலையில் சூரிய உதயம் ஆரம்பிக்கும்போது, உறக்க நிலையில் இருக்கும் லேண்டரும் ரோவரும் எழுந்து மீண்டும் ஆராய்ச்சி பணியில் ஈடுபடும். சோலார் பேனல் ஒளியைப் பெற்று, பேட்டரி சார்ஜ் ஆகி செயற்பாட்டிற்கு வரும். இதன் மூலம் நிலவின் தென் துருவத்தில் தொடர்ந்து ஆராய்ச்சி மேற்கொள்ளும்போது கூடுதலான அறிவியல் தகவல்கள் நமக்கு கிடைக்கும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்தனர். (நி-5)






# இணைந்து பணியா
# இந்திய அரசுக்கு கனட

(ஒட்டாவா)

கனடாவுடன் இந்தியா இணைந்து ப
அரசுக்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடே

சீக்கிய மதத்தலைவர் கொலைக்கு இந்தியாதான் காரணம் என்று கனடா குற்றம்சாட்டியதோடு, இந்தியத் தூதரக அதிகாரியை வெளியேற்றியது.


இது தொடர்பாக கனடாவுக்கு கடும் கண்டனம் தெரிவித்தது மட்டுமின்றி, பதிலடியாக கனடா உயர் தூதரக அதிகாரியை நாட்டை விட்டே வெளியேற இந்திய மத்திய அரசு உத்தரவிட்டது.

மேலும், கனடா வாழ் மக்களுக்கு விசா வழங்க இந்தியா இடைக்கால தடை விதித்துள்ளது. இதனால் கனடா, இந்தியா இடையேயான உறவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூ இந்த விவகாரம் தொட பிரதமர் மோடியிட படையாக உரைய அப்போது என் கவ பகிர்ந்து கொண்டேன்.

இந்த விவகாரத்தை எடுத்துக் கொள்ளவும் ப்படைத் தன்மையை

## இலங்கை உட்பட உலகளாவிய ரீதியில்
# 250 மில்லியன் மாணவர்கள் பாடசாலையில் இருந்து இடைவிலகல்
### யுனெஸ்கோ அமைப்பு தெரிவிப்பு




(பாரிஸ்)

இலங்கை உட்பட உலகளாவிய ரீதியில் 2022 ஆம் ஆண்டில் 250 மில்லியன் மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகியுள்ளதாக யுனெஸ்கோ அமைப்பு தெரிவித்துள்ளது. 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது குறித்த தொகை ஆறு மில்லியன் அதிகரிப்பு என யுனெஸ்கோ அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் கற்றல் நடவடிக்கைகளில் இருந்து பெண்கள் மற்றும் சிறுமிகள் இடைவிலக்கப்பட்டதால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் நாடுகள் தங்கள் கல்விக் கொள்கைகளை புதுப்பிக்காததும் இதற்கான காரணம் என யுனெஸ்கோ அமைப்பு தெரிவித்துள்ளது. (நி-5)

# ஹிஜாப் அணியாத பெண்களுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை
### ஈரானில் புதிய சட்டம் நிறைவேறியது



(டெஹ்ரான்)

ஈரான் நாட்டில் ஹிஜாப் அணியாத பெண்களுக்கு 10 ஆண்டுகளுக்கு சிறைத் தண்டனை விதிக்கும் வகையில் புதிய சட்ட மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈரானில் பொது இடங்களுக்கு செல்லும் பெண்கள் முகத்தை மறைக்கும் ஹிஜாப் அணிய வேண்டும், அவர்களின் உடலை மறைக்க நீண்ட, தளர்வான ஆடைகளை அணிய வேண்டும் என்பது விதி. கடந்த ஆண்டு ஹிஜாப் அணியாமல் சென்றதாக காவலில் வைக்கப்பட்டிருந்த இளம்பெண் மஹ்சா அமினி என்ற 22 வயது பெண் உயிரிழந்தார். இதையடுத்து அங்கு போராட்டங்கள் வெடித்தன.

இந்நிலையில் போராட்டங்கள் நடந்து ஓராண்டை கடந்துள்ள நிலையில், 290 உறுப்பினர்களை கொண்ட ஈரான் பாராளுமன்றத்தில் 152 உறுப்பினர்களின் ஆதரவுடன் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்படி, "பொது இடங்களில் ஹிஜாப் அணிய மறுக்கும் பெண்கள், அவர்களை ஆதரிப்பவர்களுக்கும் 5 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இங்கிலாந்தில் இ



(லண்டன்)

உலகம் எங்கும் புறாக்கள் பல்வேறு அளவுகளில் அவை காணப்பட்டாலும் தற்போது இணையத்தில் வைரலாகி வரும், இளஞ்சிவப்பு நிறம் கொண்ட புறாவின் புகைப்படம் பயனர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தி உள்ளது.

இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரில் துடிப்பான இற குகளுடன் கூடிய இந்த புறாவை கண்ட அப்பகுதி பொது மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்

# நியூசிலாந்தில் அவசரகால நி



(வெலிங்டன்)

நியூசிலாந்தின் சுற்றுலா மையமான குயின்ஸ்டவுனில் திடீரென ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...யாற்ற வாருங்கள்
# ...னடா பிரதமர் அழைப்பு



**...ந்து பணியாற்ற வேண்டும் என இந்திய ...ரூடோ அழைப்பு விடுத்துள்ளார்.**


...ரூடோ கூறியதாவது.
...ாரம் தொடர்பாக நான்
...மோடியிடம் வெளிப்
... உரையாடினேன்.
...என் கவலைகளைப்
...ண்டேன்.
...வகாரத்தை தீவிரமாக
...ாள்ளவும் முழு வெளி
...ைமையை வெளிப்படுத்த

எங்களுடன் இணைந்து பணி யாற்றவும் இந்திய அரசை கேட்டுக்கொண்டேன்.

இந்தியா வளர்ந்து வரும் முக்கியத்துவம் வாய்ந்த நாடு. உலகெங்கிலும் நாம் தொடர்ந்து பணியாற்ற வேண்டிய ஒரு நாடு. நாங்கள் பிரச்சினைகளைத் உரு வாக்கவோ அல்லது அதிகப் படுத்தவோ நினைக்கவில்லை.

இந்த விடயத்தின் உண்மையை வெளிக் கொண்டு வருவதற்கான செயல் முறைகளை மேற்கொள்ள எங்களுடன் இணைந்து பணியா ற்றுமாறு இந்திய அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் என தெரிவித்தார். (நி-5)

## ...தில் இளஞ்சிவப்பு நிற புறா



...ம் புறாக்கள்
...ளில் அவை
... தற்போது
...வைரலாகி
...ப்பு நிறம்
... புகைப்படம்
... சரியத்தில்
...ன் மான
...ஷப்பான இற
...ய இந்த
...பகுதி ொது
...துடன் பார்த்

தனர்.

இந்த அரிய வகை புறாவை கண்ட பொதுமக்கள் பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்க அவர்கள் விரைந்து சென்று பார்த்து ள்ளனர். புறாவின் இந்த தோற்றம் நகர மக்களிடையே பல்வேறு கேள்விகளை எழுப்பி உள்ளது. தனித்துவமாக இந்த நிறம் உருவானதா? அல்லது யாரேனும் புறா மீது சாயத்தை பூசினார்களா? அல்லது புறா அதன் நிறத்தை மாற்றிய மைக்கும் பொருள் மீது விழுந்ததா? என பல்வேறு கேள்விகளை சமூக வலை தளங்களில் கேட்டு தங்களது கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர். (நி-5)

## ...ந்தில் வெள்ளப்பெருக்கு
## ...ால நிலை பிரகடனம்



...ன் சுற்றுலா
...ன்ஸ்டவுனில்
... வெள்ளப்
...மாக அவசர
...படுத்தப்பட்
...ளாக பெய்து

வரும் கடும் மழை காரணமாக இந்த திடீர் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதோடு வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக பல நெடுஞ்சாலைகள் மூடப் புட்டுள்ளதாகவும் தெரிவிக்க ப்படுகின்றது. (நி-5)

## ஐ.நாவை எச்சரித்தார் சூடான் இராணுவத் தலைவர்

(கார்டும்)

நாட்டில் பல மாதங்களாக நடக்கும் போர் பிராந்தியத்தில் பரவக்கூடும் என்பதனால் துணை இராணுவப் படைகள் மீது சர்வதேச அழுத்தம் கொடு க்க வேண்டும் என சூடானின் இராணுவத் தளபதி ஐக்கிய நாடுகள் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச சமூகம் குறித்த துணை இராணுவ விரைவு ஆதரவுப் படையை பயங்க ரவாத அமைப்பாக அறிவிக்க வேண்டும் என்றும் சூடானின் எல்லைகளுக்கு வெளியே அதன் ஆதரவாளர்களைக் குறிவைக்கவும் அழைப்பு விடு த்துள்ளார். இந்தப் போரின் ஆபத்து இப்போது பிராந்திய மற்றும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறு த்தலாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏனெனில் அந்த கிளர்ச்சி யாளர்கள் பிராந்தியம் மற்றும் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சட்டவிரோத மற்றும் பயங்கரவாதக் குழுக்களின் ஆதரவை நாடியுள்ளனர் என் றும் அவர் சுட்டிக்காட்டியுள ளார். (நி-5)

## உக்ரைனுக்கு ஆயுதங்களை இனி வழங்கமாட்டோம்

**போலந்து அதிரடி அறிவிப்பு**



(வார்சா)

உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்துவதாக போலந்து அறிவித்துள்ளது.

இதேவேளை உக்ரைனிய தானிய இறக்குமதியை தடை செய்யும் போலந்தின் முடிவி ற்குப் பின்னர் உக்ரைன் ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையில் போலந்தை விமர் சித்து, அந்த நாட்டுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக அறிவித்துள்ளார்.

எனினும் இந்த நிலை உக்ரைனை கடுமையாக பாதி த்து வருவதால், அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் இது தொடர்பாக விவாதங் களை ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## முகநூல் தரிசனம் 205

## வாழ்வின் உண்மைத் தன்மையை உணர்த்திய பெரியவர்

எனது காரை சர்வீஸ் செய்ய கொடுத்து இருந்தேன். திடீரென அவசரமாக ஊருக்கு கிளம்ப வேண்டிய சூழல். ஆபிஸ் வேலை நீண்டு கொண்டே இருந்தது. வேலை முடிந்து திரும்பி பார்க்கையில் மணி இரவு 11.15. வெளியே வந்து ஆட்டோவிற்காக காத்திருந்த போது கோயம்பேட்டிற்கு ஒரு ஆட்டோகார புண்ணியவான் நுங்கம்பாக்கத்தில் இருந்து 500ரூ கேட்டார். யாரும் 400ரூபாய்க்கு குறைவாக வரவில்லை. சரி பார்க்கலாம் என்று நின்று கொண்டு இருந்தபோது மெதுவாக ஒரு ஆட்டோ வந்து என் அருகில் நின்றது . ஒரு 70 வயதுள்ள முதியவர் எங்கு போகணும் என்று கேட்க , நான் கோயம்பேடு என்று கூற, அவர் சரி தம்பி மீட்டர் போடுறேன் என்றார்.

அவர் யூனிபார்ம்ல இல்லாததால் என்ன தாத்தா எங்க யூனிபார்ம்? இந்த நேரத்துல இந்த வயசுல வண்டி ஓட்டுறீங்க என்று கேட்க.

தம்பி வரும்போது ஏதோ ஞாபகமறதில வீட்ல இருந்து 10 மணிக்கு கிளம்பும்போது போட மறந்துட்டேன் என்று கூற எனக்கு் என்ன சொல்வதென்று தெரியவில்லை.

பிறகு சொன்னார். தம்பி 46 வருஷமா ஆட்டோ ஓட்டுறேன். சென்னைல மூலைமுடுக்கு வரை தெரியும். தைரியமாக வாங்க என்று கூற நான் சிரித்தேன்.

பிறகு என்னத்துக்கு தாத்தா படுத்து ஓய்வு எடுத்து தூங்க வேண்டிய வயசுல இப்படி இன்னும் உழைக்கிறீங்கனு நான் கேட்க.

எனக்கு ஒரு பிள்ளை தம்பி. ஆட்டோ ஓட்டித்தான் படிக்க வைச்சேன். நல்லா படிச்சான். நல்ல வேலை கிடைச்சது. ஒரு கல்யாணத்த பண்ணிட்டா நம்ம கடமை முடிஞ்சது. பிறகு நம்பள பாத்துப்பான்னு நினைச்சேன். கல்யாணம் ஆகி 18 வருஷம் கழிச்சு பிறந்த பிள்ளை அவன். இப்பவரைக்கும் அவ்வளவு உசுரு அவன் மேல எனக்கு. அவனுக்கு கல்யாணம் ஆன பொறவு எதுவும் சரியில்ல. சரி நீ நிம்மதியா இருடான்னு தனியாக போக சொல்லி ட்டேன். விருப்பமே இல்லாமல்தான் போனான். அப்பப்ப வந்து எங்கள பார்ப்பான்.

அதுக்குள்ள என் மனைவிக்கும் முடியல. பகல் பூரா அவங்க கூட இருந்து அவங்கள பார்த்துப்பேன். பகல்ல இந்த டிராபிக்ல என்னால வண்டி ஓட்ட முடியாது. கண்ணு கொஞ்சம் நல்லா இருக்கு. அதனால் இரவு 9 மணில இருந்து காலைல 4 மணி வரைக்கும் ஆட்டோ ஓட்டிட்டு வீட்டுக்கு போய்டுவேன். சொந்த ஆட்டோ தம்பி இது. ஒரு நாளைக்கு 600ரூபாய் நிற்கும். எனக்கும் என் பொண்டாட்டிக்கும் அதுவே போதும். இத்தன வயசுக்கு மேல எனக்கு எதுக்கு் தம்பி அளவுக்கு மீறி பணம் வேணும். ஒரு நாள் 600 ரூ வருதா சரி சூப்பர். இல்ல ஒரு நாள் ரூ300 தான் வருதா. ஆண்டவன் இன்னைக்கு இவ்ளோதான் படி அளந்திருக்கான். நாளைக்குபத்தி இன்னைக்கே எதுக்கு யோசிக்கணும் என பேசிக்கொண்டே சென்றார்.

ஏன் உங்க பையன் உங்களுக்கு எதுவும் என நான் கேட்கத் தொடங்க அவன் மவராசன் தம்பி. எப்பவுமே என் ராசா என்று மகனை விட்டு கொடுக்காமல் பேசினார்.

நான் நிஜமாகவே பிரம்மித்தேன். எப்படி தாத்தா உங்களால் இப்படி இருக்க முடியுதுன்னு நான் கேட்க.

தவமா நான் கோவில் கோவிலாக ஏறி இறங்கி பெத்த பிள்ளை அவன். அவன நான் முதன் முதலா கையில் வாங்கும் போது. ஆண்டவா! இந்தக் குழந்தைக்கு எந்தக் கஷ்டமும் வரமால் சந்தோஷமாக இருக்கணும். அவனுக்கு வர்ற கஷ்டத்தையெல்லாம் எனக்கு கொடுன்னுதான் வேண்டிகிட்டேன். நான் மட்டும் இல்ல. எல்லா தாய், தகப்பனோட வேண்டுதலும் அதுவாக மட்டும் தான் இருக்கும்.

ஆனா, இந்த மனசு இருக்கே அவன் வளர வளர நாம செஞ்சத அவன் திருப்பி நமக்கு செய்யணும்னு எதிர்பார்க்கும். அங்க தான் பிரச்சனையே. எப்பவுமே அவன நான் பார்க்கும்போது முதல் முதலா அவன கையில் வாங்கியதும் அந்த வேண்டுதலும் ஞாபகம் வரும். இப்ப வரைக்கும் ஒரு துளி வருத்தம் கூட எனக்கு அவன் கிட்ட இல்ல. எனக்கு எப்பவுமே என் ராசா அவன் என்று கூற விக்கித்து நின்றேன்.

வாழ்க்கையின் பெரிய பாடத்தை அவரிடம் இன்று படித்தேன். பற்றற்ற தன்மை என்று பலர் சொல்லி செயற்படுத்த முடியாத மிகப்பெரிய விடயத்தை எதையும் படிக்காத ஒரு எளிய மனிதர் எனக்குப் பாடம் எடுத்து கொண்டு இருந்தார்.

கோயம்பேடு அதற்குள் வந்துவிட மீட்டரில் 150 ரூபாய் காட்டியது. நான் இறங்கும் போது 1-1/2மீட்டர் காசாக ரூ200 கொடுக்க, தம்பி இந்தாங்க மீதி 50 ரூபாயை கொடுத்தார். நான் நெகிழ்ந்து விட்டேன்.

உங்களுடன் ஒரு போட்டோ எடுத்து கொள்ளட்டுமா என்று நான் கேட்க, தம்பி என் வாழ்க்கைல இப்படி கேட்ட முதல் ஆள் நீங்கதான். இப்ப ஆட்டோவில் வர்றவங்க எல்லாம் யாரும் வாயை திறந்து எங்ககிட்ட பேசறது கூட இல்ல. மொபைல்போன நோண்டிக்கிட்டே வருவாங்க. சக மனுஷனா கூட எங்கள பார்க்க மாட்டாங்க. நீங்க ரொம்ப நல்லா பேசிக்கிட்டு வந்தீங்க. ஆண்டவன் உங்களையும் உங்க குடும்பத்தையும் ஆசீர்வதிக்கட்டும் என நெகிழ்ந்து கூறினார்.

கடைசியாக தாத்தா உங்க பேரு என்ன என்று நான் கேட்க, என் பேரு ராசேந்திரன், என் மகன் பேரு ராசராசன் என்று சொல்லும் போது அவ்வளவு பெருமிதம். அவ்வளவு திருப்தி அவருக்கு.


ஒரு மனிதன் வாழ்வது முக்கியமல்ல: திருப்தியுடன் நிறைவாக எப்படி எதுவுமே இல்லையென்றாலும் கூட வாழ வேண்டும் என்று அந்த எளிய மனிதர் சொல்லாமல் சொல்லிவிட்டுச் சென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நிபா' வைரஸினால்

# இலங்கைக்கு பாதிப்பில்லை

### சுகாதாரப் பிரிவு தகவல்



(கொழும்பு)

இலங்கையில் நிபா வைர ஸினால் எவ்வித பாதிப்பும் இல்லை. இது குறித்து தேவை யற்ற அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கம் அசேல குணவர்தன தெரி வித்துள்ளார்.

தென்னிந்தியாவின் கேர ளப் பகுதியில் ஒகஸ்ட் மாத இறுதியில் இருந்து நிபா வைரஸ் தொற்றாகப் பரவி வருவதாகவும் முன்னதாக இது பங்களாதேஷில் தொற்று நோயாகப் பரவியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது புதிய வைரஸ் அல்ல. நாட்டில் இந்த வைரஸினால் பாதிப்பு எதுவும் பதிவாக வில்லை. கொவிட் தொற்று நோய் போன்று இந்த நிலை மைக்கு அச்சப்படத் தேவை யில்லை. நாட்டை முடக்குவ தற்கான திட்டம் எங்களுக்கு இல்லை.

மேலும்நாடுமுழுவதும்கடை கள் மற்றும் விமானப் பயணி களை சரிபார்ப்பதற்கும் எவ்வித அவசியமும் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# போலி முட்டை தொடர்பான தகவல்களில் உண்மையில்லை

### நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைச் சந்தையில் போலியான செயற்கை முட்டை கள் விநியோகம் தொடர்பில் வெளியாகியுள்ள செய்திகள் உண் மைக்கு புறம்பானவை என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மக்கள் முட்டை களை அச்சமின்றி கொள்வ னவு செய்து, பயன்படுத்துமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கையில் போலியான செயற்கை முட்டை களை விற்பனை செய்ய முடி யாது என்பதுடன் அவற்றை உணவுக்காக பயன்படுத்தவும் முடியாது.

இந்நிலையில் இவ்வாறான முறைகேடுகள் நடந்தால் 1977 என்ற இலக்கத்துக்கு அறியத் தருமாறும் நுகர்வோர் பாது காப்பு அதிகார சபை வலியுறுத் தியுள்ளது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 180 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 450 |
| தக்காளி | 200 | 170 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 140 | 180 | 200 |
| கோவா | 150 | 140 | 160 | 150 |
| கரட் | 400 | 280 | 260 | 300 |
| பூசணி | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 70 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 160 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 350 | 400 |
| வெண்டக்காய் | 100 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150 | 150 |
| லீக்ஸ் | 160 | 150 | 160 | 150 |
| பீற்றூட் | 120 | 120 | 160 | 160 |
| கறிமிளகாய் | 250 | 300 | 250 | 320 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 100 | 100 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | 160 | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 50 | 100 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1000 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 280 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | -- | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 60 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 70 | 100 | 120 |

# புரட்டாதி மாத இராசி பலன்கள் 18.09.2023-17.10.2023

## தனுசு

**எதிர்காலச் சிந்தனை யிலேயே எப்பொழுதும் மூழ்கியிருக்கும் தனுசு இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு, ஏழரைச் சனியில் குடும்பச் சனியாக வக்கிரம் பெற்றிருக்கிறார். எனவே எதை யும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் தாக்குதல்கள் வரலாம். வழக்குகள் தொடரும். வருமானப் பற்றாக்குறையின் காரணமாக ஒருசிலர் கடன்களை வாங் கும் சூழ்நிலையும் ஏற்படும். தொழில், உத்தியோகத்தில் மிகுந்த விழிப்புண ர்ச்சி தேவை. எந்தப் புது முயற்சியில் ஈடுபட்டாலும் அனுபவஸ்தர்களையோ, ஆன்மிகப் பெரியவர்களையோ ஆலோ சனை கேட்டுச் செய்வது நல்லது.

**புதன் வக்கிரம்**

புரட்டாதி 10 ஆம் திகதி, கன்னி இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். அதேநேரத்தில் அந்த வீடு புதனுக்கு உச்ச வீடாகும். உங்கள் இராசிக்குத் தொழில் ஸ்தானாதிபதி புதன் வக்கிரம் பெற்றாலும் யோகம்தான். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். புதிய தொழில் தொடங்குவது பற்றிய சிந்தனை செய லாகும். அரசியல் களத்தில் இருப்பவர்க ளுக்கு திடீரென பொறுப்புகள் மாற்றப்பட லாம். வாழ்க்கைத் துணையின் உடல் நலத்தில் திடீர் தாக்குதல்களும் வைத் தியச் செலவுகளும் ஏற்படும். பெற்றோ ரின் உடல்நலத்திலும் பிரச்சினைகள் ஏற்படலாம். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. இருப்பினும் கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடி விடும். புரட்டாதி 17 ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் வருகிறார். உங்கள் இராசிக்கு விரயாதிபதியான செவ்வாய் லாப ஸ்தா னத்திற்கு வருவதால் விர யத்திற்கேற்ற லாபம் வந்து கொண்டேயிருக்கும். எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று நினைத்தாலும் பணத்தைக் கையில் வைத்துக் கொண்டு செய்ய வேண்டுமே என்று நினைக்க வேண்டாம். காரியத்தை தொடங்கி விட்டால் பணப்புழக்கம் வந்துசேரும். அதுமட்டுமல்ல கேட்ட இடத்தில் உதவிக ளும் கிடைக்கும். சொத்து விற்பனையால் லாபங்களும் உண்டு.

**துலாம் - புதன்**

புரட்டாதி 28 ஆம் திகதி துலாம் இரா சிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு தொழில் ஸ்தானாதிபதியான புதன், லாப ஸ்தானத்திற்கு வருவது நல்ல நேரம் தான். தொழில், உத்தியோகத்தில் படிப்படி யான முன்னேற்றம் ஏற்படும். வாழ்க் கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உதிரிவருமானமும் வர லாம். பணி ஓய்வு பெற்ற பிறகும் உங்க ளுக்கு வேலை கிடைத்து வருமானம் வரலாம். வெளிநாட்டில் இருந்து நல்ல அழைப்புகள் வரும். சுபகாரியப் பேச்சு முடிவாகும். பொதுவாழ்வில் உள்ளவர்க ளுக்கு புதிய முயற்சிகளில் வெற்றி கிடை க்கும். தொழில், வியாபாரம் செய்பவர்க ளுக்கு குறுக்கீடு சக்திகளை எதிர்கொள் ளும் சூழல் உருவாகும். உத்தியோகத் தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர் களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம் இது. கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வருவதில் தாமதம் ஏற்ப டும். மாணவ-மாணவிகளுக்கு மறதி அதிகரிக்கும். எனவே ஆசிரியர்களின் ஆலோசனைகளைக் கேட்டுக் கொள்வது நல்லது. பெண்களுக்கு நன்மையும் தீமை யும் கலந்தே நடைபெறும். நல்ல வாய்ப்பு வந்தாலும் உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. குடும்பச் சுமை அதிகரிக்கும்.

## மகரம்

**நிதானத்தோடு செயற் பட்டால் நிம்மதி கிடைக்கும் என்று சொல்லும் மகர இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசியிலேயே இராசிநாதன் சனி சஞ்ச ரிக்கிறார். ஆனால் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். எனவே ஆரோக்கியக் குறைவு உருவாகலாம். அமைதியான வாழ்க்கையில் மற்றவர்களின் குறுக்கீ டுகள் வந்து மனக்கலக்கத்தை உரு வாக்கும். காரிய தாமதங்களும் கடன் சுமை அதிகரிப்பும் ஏற்படும் மாதம் இது. விலகிய ஏழரைச் சனி மீண்டும் வக்கிர இயக்கத்தில் வந்திருப்பதால் விழிப்பு ணர்ச்சியோடு செயற்பட வேண்டிய மாதம் இது.

**புதன் வக்கிரம்**

புரட்டாதி 10 ஆம் திகதி, கன்னி இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 6, 9 இற்கு அதிபதியா னவர் புதன். 6 இற்கு அதிபதி புதன் வக்கிரம் பெறுவது நன்மைதான். உத்தி யோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் உண்டு. "கடன் சுமை கூடுகிறதே" என்று கவலைப்படுவீர்கள். இடமாற்றம், வீடுமாற்றம் இனிமை தரும் விதம் அமையும். 9 இற்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் இந்த வக்கிர காலத்தில் பெற்றோர் வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். உத்தி யோகத்தில் சக பணியாளர்களால் சில பிரச்சினைகள் உண்டு. புரட்டாதி 17 ஆம் திகதி துலாம் இராசிக்குச் செவ்வாய் வருகிறார்.

உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழில் ஸ்தானம் வலுவடைகி ன்றது. எனவே தொழில் முன்னேற்றம் ஏற்படும். எதிர்பார்த்தப டியே லாபம் கிடைக்கும். புதிய ஒப்பந் தங்கள் வந்து சேர்ந்து பொருளாதார நிலை உயர வழிவகுக்கும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. "வாங்கிய இடத்தில் வீடு கட்ட எப்பொழுது நல்ல நேரம் வரும்" என்று காத்திருந்தவர் களுக்கு இப்பொழுது நல்ல தகவல் கிடைக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. சனியின் வக்கிரம் நிவர்த்தியான பிறகு எதையும் துணிந்து செய்ய இயலும்.

**துலாம் - புதன்**

புரட்டாதி 28 ஆம் திகதி, துலாம் இராசிக்குப் புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்திற்கு அதிபதி புதன் 10 ஆம் இடத்திற்கு வரும்பொழுது தொழிலில் முன்னேற்றம் உண்டு. தொழிலை விரிவு செய்ய எடுத்த முயற்சி வெற்றி பெறும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி பலன்தரும். மாமன், மைத்துனர் வழி யில் நடைபெறவிருக்கும் மங்கல நிகழ் ச்சிகளை முன்னின்று நடத்தி வைப்பீர் கள்.


சேமிப்பு உயரும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். தொழில், வியாபாரம் செய்பவர்கள் அதை விரிவுபடுத்துவது பற்றி ஆலோசிப்பீர் கள். உத்தியோகத்தில் உள்ளவர்க ளுக்கு திறமை பளிச்சிடும். கலைஞர் களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். மாணவ- மாணவிகளுக்குக் கல்வி தொடர்பான பயணங்கள் உண்டு. பெண்களுக்கு சுபவிரயங்கள் அதி கரிக்கும். பொருளாதாரம் சகஜ நிலைக்கு வரும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதமடைந்துள்ள குறிகாட்டுவான் இறங்குதுறை;
# புனரமைப்பு செய்யுமாறு மக்கள் கோரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகத்திற்கு பொருட்களை கொண்டு செல்வதில் சிரமங்களை எதிர்கொள்வதனால் மிக விரைவில் குறிகாட்டுவான் இறங்குதுறையை புனரமைப்பு செய்து தருமாறு தீவக மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



யாழில் இருந்து நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய பகுதிகளுக்கு செல்வதற்கான இறங்குதுறையாக குறிகாட்டுவான் இறங்குதுறையே உள்ளது.

தற்போது குறிகாட்டுவான் இறங்குதுறை சேதமடைந்துள்ளமையால், கனரக வாகனங்கள் இறங்குதுறைக்கு அண்மித்த பகுதிக்கு வர தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதனால் கனரக வாகனங்களில் நயினாதீவு மற்றும் நெடுந்தீவுக்கு கொண்டு செல்வதற்காக கொண்டு வரப்படும் , அத்தியாவசிய பொருட்கள் உட்பட கட்ட பொருட்களான மணல், கம்பி, சீமெந்து ஆகியவை இறங்குதுறைக்கு சற்று தொலைவில் இறங்கி அங்கிருந்து மனித வலுவை பயன்படுத்தி தூக்கி சென்று படகுகளில் ஏற்ற வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

அதேவேளை குறிகாட்டுவான் - நயினாதீவுக்கு இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த "கடற்பாதை" மிக மோசமாக பழுதடைந்துள்ளமையால் அதன் சேவையும் கடந்த சில மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளமையால் நயினாதீவுக்கு பொருட்களை எடுத்து செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் மற்றும் நாகவிகாரை ஆகியவற்றுக்கு அதிகளவான யாத்திரியர்கள் தினமும் செல்வதனால் பயணிகள் படகு சேவையில் பொருட்களை அதிகளவில் ஏற்ற முடியாத நிலைமை காணப்படுகிறது.

மிக விரைவில் குறிகாட்டுவான் பாலத்தையும் கடற்பாதையை புனரமைப்பு செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(5-6-33)



கிளி/பேராலை சி.சி.த.க பாடசாலையின் சிறுவர் விளையாட்டு முற்றத்திறப்பு விழா அண்மையில் பாடசாலையின் அதிபர் நடராசா இராமதாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்,பச்சிலைப் பள்ளியின் பிரதேச சபையின் மேனாள் உறுப்பினர் திருமதி. அருள்ச்செல்வி கனகராசா மற்றும் பழைய மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# காலநிலை மாற்றம் தொடர்பான செயலமர்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில்

(நெளுக்குளம்)

காலநிலை மாற்றம் தொடர்பான செயலமர்வு ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று காலை இடம்பெற்றது.

சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த செயலமர்வில் ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அமைப்பின் யாழ். வளவாளராக பீற்றர் சேவியர் கலீஸ் கலந்துகொண்டு கருத்துக்களை பரிமாறினார்.

செயலமர்வின் போது திடீர் அனர்த்தங்களில் இருந்து பாதுகாத்து கொள்ளல், நீர்நிலைகளில் இருந்து பாதுகாத்து கொள்ளல், தீவிபத்து, அவசர தொலைபேசி இலக்கங்களின் பாவனை, சூழல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தது.

குறித்த கருத்தரங்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, வெலிஓயா ஆகிய ஆறு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், இளைஞர் கழக பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். (5-6-299)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2919


### சுந்தரலிங்கம்




### சாம்பவி




### வர்மன்




### அனோஜன்




### நிரோஜா




### கம்ஷா




**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 290





சகல நம்பிக்கையையும் இழந்து முழுகிச் சாகப் போகிறவனுடைய ஓலக்குரல் அது என்பதை பூங்குழலி அறிந்தாள். அவன் தலையை நிமிர்த்திய போது பிறைச் சந்திரனின் மங்கிய நிலா வெளிச்சத்தில் அவன் முகம் ஒரு கணம் தெரிந்தது. வெறி முற்றிய பைத்தியக்காரனின் முகந்தான் அது. அவனாக வந்து படகில் ஏறிக் கொள்வான் என்று நினைப்பது வீண். நாம்தான் அவனைக் காப்பாற்றிப் படகில் ஏற்றியாக வேண்டும். நல்ல சங்கடத்தை நாமாக வரவழைத்துக் கொண்டோம். 'பெண் புத்தி பின்புத்தி' என்று சொல்லுகிறார்களே அது சரிதான்.'

உடனே பூங்குழலி மிகப் பரபரப்புடன் சில காரியங்களைச் செய்தாள். படகில் கிடந்த பாய்மரம் கட்டுவதற்கான கயிற்றின் ஒரு முனையைப் படகிலிருந்து நீண்டிருந்த கட்டையில் சேர்த்துக் கட்டினாள். இன்னொரு முனையைத் தன் இடுப்போடு சேர்த்துக் கட்டிக்கொண்டாள் கடலில் குதித்தாள். வெகு லாவகமாகக் கைகளை வீசிப் போட்டு நீந்திக் கொண்டு போனாள். வந்தியத்தேவன் அருகில் சென்றாள். கையினால் தாவிப் பிடிக்கக் கூடிய தூரத்தில் நின்று கொண்டாள்.

வந்தியத்தேவனும் அவளைப் பார்த்துவிட்டான். அவனுடைய முகத்திலும் கண்களிலும் பயங்கரமான கொலை வெறி தாண்டவமாடியது.

பூங்குழலியின் உள்ளம் அதிவேகமாக இயங்கியது. நீந்தத் தெரியாதவர்களும் கை சளைத்துத் தண்ணீரில் முழுகப் போகிறவர்களும் கடைசி நேரத்தில் என்ன செய்வார்கள் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. தங்களைக் காப்பாற்றுவதற்காக யாராவது வந்தால் அப்படி வருகிறவர்களின் தோளையோ கழுத்தையோ கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விடுவார்கள். காப்பாற்ற வருகிறவர்களும் நீந்த முடியாமல் செய்து விடுவார்கள் உயிரின் மேலுள்ள ஆசையானது அச்சமயம் அவர்களுக்கு ஒரு யானையின் பலத்தை அளித்து விடும். காப்பாற்ற வருகிறவர்களை இறுக்கிப் பிடித்துத் தண்ணீரில் அமுக்கப் பார்ப்பார்கள். அவர்களுடைய பயங்கர ராட்சதப் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ளவும் முடியாது. நீந்தவும் முடியாது. இரண்டு பேருமாகச் சேர்ந்து கடலுக்கு அடியில் போக வேண்டியதுதான்.


இதையெல்லாம் நன்கு அறிந்திருந்த பூங்குழலி மின்னல் வேகத்தில் சிந்தனை செய்தாள் ஒரு தீர்மானம் செய்து கொண்டாள். உயிருக்கு மன்றாடித் தத்தளித்துக் கொண்டிருந்த வந்தியத்தேவனை மேலும் சிறிது நெருங்கினாள். அவனுடைய தலைப்பக்கமாக வந்தாள்.

ஒரு கையினால் நீந்திக் கொண்டு இன்னொரு கையை இறுக மூடி ஓங்கினாள். வந்தியத்தேவனுடைய முகத்தை நோக்கிப் பலமாக ஒரு குத்துக் குத்தினாள். மூக்குக்கும் நெற்றிக்கும் நடுவில் அந்தக் குத்து விழுந்தது.

படகு வலித்து வலித்துக் கெட்டிப்பட்டிருந்த அவளுடைய கையினால் குத்திய குத்து வஜ்ராயுதம் தாக்கியது போல வந்தியத்தேவனைத் தாக்கியது. அவனுடைய தலை ஆயிரமாயிரம் சுக்கலாயிற்று. அவனுடைய கண்கள் பதினாயிரம் துணுக்குகள் ஆயின. ஒவ்வொரு கண் துணுக்கிற்கு முன்னாலும் ஒரு லட்சம் மின்பொறிகள் ஜொலித்துக் கொண்டு பறந்தன.

ஒவ்வொரு மின்பொறியிலும் சமுத்திரகுமாரியின் முகம் தோன்றி 'ஹா ஹா ஹா ஹா' என்று பேய்ச் சிரிப்புச் சிரித்தது. ஆயிரம், பதினாயிரம், லட்சம் பேய்களின் அகோரமான சிரிப்பின் ஒலியில் அவன் காது செவிடுபட்டது. அப்புறம் அவனுக்குக் காதும் கேட்கவில்லை. கண்ணும் தெரியவில்லை. நினைவும் இல்லை. முடிவில்லாத இருள். எல்லையில்லாத மௌனம்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வாக்குறுதி மீறிய மேயர்

(நேற்றைய தொடர்ச்சி)



மேயர் அதிகாரிகளுடன் ஆலோசனையில் தீவிரமாக இறங்கினர். காவலாளி உடனடியாக அவனை மேயரை பார்க்க அனுப்பினான். மேயரை கண்டதும் நான் எலிகளை விரட்டுகிறேன். ஆனால் எனக்கு 1000 பொற்காசுகள் வேண்டும் என கேட்டான். மேயர் அதிர்ந்தார். என்ன இந்த சாதாரண எலிகளை விரட்ட 1000 பொற்காசுகளா? முடியாது என்றார் மேயர். அப்படியென்றால் நீங்களே விரட்டி கொள்ளுங்கள் நான் கிளம்புகிறேன் என்றான் விசித்திர மனிதன். மேயருக்கு வேறு வழியில்லை. சரி என்று ஒப்புக்கொண்டார். விசித்திர மனிதன் கையில் இருந்த புல்லாங்குழலை எடுத்து வாசித்து கொண்டே தெருக்களில் நடக்க ஆரம்பித்தான். அவனது இசை அத்தனை இனிமையாக இருந்தது. எலிகள் ஒவ்வொன்றாக அந்த இசையில் மயங்கி அவன் பின்னே நடக்க ஆரம்பித்தன. அவன் அவற்றை பின்னாடி வரும்படியாக இசைத்து கொண்டே நகரத்தின் எல்லையில் இருக்கும் நதிக்கு சென்றான். நதியில் அத்தனை எலிகளும் குதிக்க ஆரம்பித்தன. நகரமும் சுத்தமானது. மறுநாள் சூரியன் வரும்போது நகரமே பிரகாசமாக இருந்தது. விசித்திர மனிதன் மேயரை பார்க்க வந்தான். பொற்காசுகளை கேட்டதும் மேயர் 1000 பொற்காசுகள் தர முடியாது வேண்டுமென்றால் 100 பொற்காசுகள் தருகிறேன் என்றார். விசித்திர மனிதன் கூறியபடி வேண்டும் வாக்குறுதியை மாற்றுவது மேயர் பொறுப்புக்கு அழகல்ல என்றான். அதிகமாக பேசுகிறாய் வேண்டுமென்றால் 50 பொற்காசுகள் தருகிறேன் இல்லையென்றால் ஓடிவிடு சிறைப் பிடித்து விடுவேன் என்று மிரட்டினார்.

ஏமாற்றுவது நல்லதல்ல. இதற்கான பதிலடியை தருகிறேன் என்று கூறி கொண்டே தெருக்களில் இசைத்து கொண்டு நடந்தான்.

அவன் நடக்க ஆரம்பித்ததும் ஒவ்வொரு வீட்டின் உள்ளே இருந்த குழந்தைகள் வெளியே வந்தனர். அவர்கள் அவன் இசைக்கு மயங்கி அவன் பின்னே நடக்க ஆரம்பித்தனர். நகர மக்கள் குழந்தைகள் எங்கு செல்கிறார்கள் என்று பின் தொடர்ந்தார்கள். குழந்தைகள் சுயநினைவில் இல்லை என்பதை உணர்ந்த மக்கள் அவர்களை தடுக்க ஆரம்பித்தனர். ஆனால்முடியாமல்போனது. சிறிது தூரம் சென்றதும் குழந்தைகள் மாயமாக மறைந்தனர். ஒரு சிறுவன் மட்டும் நடக்க முடியாமல் அங்கே விழுந்து கிடந்தான். மக்கள் அவனிடம் குழந்தைகளை பற்றி விசாரித்தனர். சிறுவனோ, " நானும் மயங்கியபடி தான் சென்றேன். அவர் இசையில் பெரிய பாறையில் இடைவெளி போல தோன்றியது. அவர்கள் உள்ளே செல்லும்போது அந்த பாறையின் ஓட்டை அடைக்க ஆரம்பித்தது. என்னால் வேகமாக நடக்க முடியவில்லை. நான் செல்வதற்குள் அது மூடிக் கொண்டது" என்றான். குழந்தைகளை பறிகொடுத்த மக்கள் மேயரை நோக்கி சென்றனர். நடந்தவற்றை மேயரிடம் எடுத்து கூறினர். மேயரோ தன் தவறை உணர்ந்தார். அவனுக்கு தகுந்த சன்மானம் கொடுத்திருந்தால் அவன் இப்படி செய்திருக்க மாட்டான் என வருந்தினார். குழந்தைகள் திரும்பி வரவில்லை. மக்கள் கவலையில் ஆழ்ந்தனர்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை இன்றைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. *– யாரோ*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் இளைஞர்களே! இந்த நாடு உருப்படாது

நாடு என்பது எப்படியாக இருக்க வேண்டும் என்பதை வள்ளுவப் பெருந்தகை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

**நாடு** என்ற அதிகாரத்தில் பத்து குறட்பாக்கள் மூலம் நாடு பற்றி விளக்கிய வள்ளுவர்;

*உறு பசியும் ஓவாப் பிணியும் செறு பகையும்*
*சேராதியல்வது நாடு*

என ஒரு குறளில் விதந்துரைப்பார்.

ஆம், நெடும் பசியும் தீராத நோயும் விலகாத பகையும் இல்லாதிருப்பதுதான் நாடு என்பது அத்திருக்குறளின் பொருள்.

அதாவது, நாடு என்றால் அங்கு பசியோ பிணியோ பகையோ இருத்தலாகாது.

ஆனால் எங்கள் நாட்டை எடுத்துப் பாருங்கள். மொத்த சனத்தொகையில் கணிசமான மக்கள் ஒரு நேர உணவை மட்டுமே உண்கின்றனர்.

தவிர தொற்று நோய், தொற்றா நோய்க்கு இங்கு குறைவே இல்லை. அதிலும் டெங்குத் தொற்று இலங்கையின் தேசிய நோய் போல் சுற்றிச் சுழன்று மக்களை வதைக்கிறது.

இதற்கும் மேலாக, புற்றுநோய், உயர்குருதி அமுக்கம், சலரோகம் ஆய தொற்றா நோய்களுக்கும் குறைவு இல்லை. இதுமட்டும் தான் என்றால் இல்லை.

அழிவைத் தரக்கூடிய பகை இந்த நாட்டை நாசமறுக்கிறது. நாடு கந்தறுந்து காவடி எடுத்தாலும் தமிழ் மக்கள் மீது சிங்கள ஆட்சியாளர்களும் சிங்களப் பேரினவாதிகளும் பௌத்த பிக்குகளும் தீராத பகையோடு உள்ளனர்.

ஆக, ஒரு நாட்டில் எவையெல்லாம் இருக்கக் கூடாது என வள்ளுவர் கூறினாரோ அவையெல்லாம் நம் நாட்டில் இருக்கின்றன.

அதேநேரம் இந்தநாட்டில் நீண்டகாலமாக இருக்கக்கூடிய இனப் பிரச்சினையைத் தீர்த்து நாட்டை சுமுகமான பாதையில் கொண்டு செல்வதற்கு சிங்கள அரசியல்வாதிகள் எவரும் தயாரில்லை.

சிங்கள அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை ஆட்சிப் பீடம் கிடைக்காத வரையில், இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் எனக் கோசமிடுவர். ஆட்சியில் அமர்ந்து விட்டால், இலங்கை பௌத்த சிங்கள நாடு என மார்தட்டுவர். இதுவே வழமையும் நிலைமையுமாகும்.

இஃது அவர்களின் பக்கமென்றால் எங்கள் தமிழ் அரசியல் தரப்பை சொல்லவும் வேண்டுமோ.

முதுமை வயப்பட்ட ஒருவரே நம் தலைவர். அவர் தீபாவளி, பொங்கல், புத்தாண்டு எனப் பட்டியல் இட்டு இதற்குள் தீர்வு என்பார். அதை நம் தமிழ் மக்கள் நம்புவர்.

தியாகி திலீபனின் நினைவேந்தலை யாராலும் தடுக்க முடியாதென்பார்.

ஆனால் அவரே அந்த நினைவேந்தலில் பங்குபற்றமாட்டார்.

ஆக, எங்கள் தமிழ் அரசியல் இனி மீளப் போவதில்லை. தமிழ் மக்களுக்காக அவர்களால் எதுவும் செய்ய முடியாது.

ஆகையால் அன்புக்குரிய தமிழ் இளைஞர்களே! நீங்கள் தமிழ் அரசியல்வாதிகளை நம்பி காலத்தை இழந்து போனீர்கள்.

எங்கள் மண்ணில் போதைப்பொருள் வியாபாரிகள் சூழ்ந்து விட்டனர். தற்கொலை மரணங்கள் மலிந்துவிட்டன.

ஆயினும் இதுபற்றி தமிழ் அரசியல் தரப்புகள் இம்மியும் கவலைப்படப் போவதில்லை.

ஆகையால் இனியும் உங்கள் காலத்தை வீணாக்காமல் உங்கள் வாழ்வை உயர்த்த முடிவெடுங்கள். ஏனெனில் இந்த நாடு இனி உருப்படப் போவதில்லை.

ஆகையால் நீங்களே உங்கள் எதிர் காலத்தை உன்னதமாக்குங்கள்.

# நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதே என் நோக்கம்

## ஐ.நாவில் ஜனாதிபதி ரணில்

"நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதே எனது நோக்கம்" என ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு இலங்கையர்களிடமும் சர்வதேசத்திடமும் ஆதரவு இருக்கும் என தான் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த ஆண்டு, பல உலகளாவிய நெருக்கடிகளுக்கு மத்தியில், இலங்கை சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக அண்மைக் காலங்களில் மிகவும் சவாலான காலகட்டத்தை அனுபவித்து வந்தது. இது மக்களின் வாழ்க்கையில் பேரழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

நமது பாராளுமன்றத்தை ஆக்கிரமிக்கும் முயற்சிகளால் நமது ஜனநாயக மரபுகள் கூட அச்சுறுத்தலுக்கு உள்ளாகின. இருந்தபோதிலும், ஆழமாக வேரூன்றிய மற்றும் உறுதியான ஜனநாயக மரபுகள் காரணமாக, ஜனநாயக அரசியல் அதிகார மாற்றத்தை ஏற்படுத்துவதில் நாங்கள் வெற்றி பெற்றோம்.

பொருளாதாரம், நிதி, நிறுவன மற்றும் நல்லிணக்கம் ஆகிய துறைகளில் நான் தொடங்கிய சீர்திருத்தங்கள் ஒருபுறம் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே நம்பிக்கை மற்றும் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டவை.

தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததிக்கு சமாதானம், சுபீட்சம் மற்றும் நல்லிணக்கத்தின் எதிர்காலத்தை உறுதிசெய்து, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள இலங்கை சமூகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் பயனளிக்கும் நிலைபேறான மற்றும் நிலையான மீட்சி மற்றும் வளர்ச்சியை நோக்கி நாட்டை வழிநடத்துவதே எனது நோக்கமாகும்.

இந்த இலக்கை அடைவதில், எங்களுடைய சொந்த மக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் ஆதரவு, நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு கிடைக்குமென்பது எனது நம்பிக்கையாகும். உலக வல்லரசுகளுக்கிடையிலான மோதல்கள் மற்றும் பதற்றங்கள், பொருளாதார, நிதி ஸ்திரத்தன்மைக்கு நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தல் விநியோகச் சங்கிலிகளை சீர்குலைத்து பணவீக்கம் மற்றும் உணவு, வலுசக்தி பாதுகாப்பின்மையை ஏற்படுத்தல் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் கொள்கைகளை தயாரிக்க கூடிய சூழ்நிலைகளை மேலும் சிக்கலாக்குகிறது.

உணவுப் பற்றாக்குறை, பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் மத்தியில் உணவுப் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்தி வருகின்றது. அதே நேரத்தில் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக குழந்தைகளின் கல்வி மற்றும் போசாக்கு நிலைமை பாதிக்கப்பட்டுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, காலநிலை மாற்றம், கடன் நிவாரணம் மற்றும் நிலையான.வளர்ச்சி ஆகிய இந்த இணைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்க பாதுகாப்பு சபையும் தவறிவிட்டது. இது மனிதகுலத்தின் எதிர்காலத்தை பாதிக்கிறது.

சர்வதேசம் இன்று பாரிய மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. அதே சமயம், வரலாறு காணாத சவால்களை எதிர் கொண்டுள்ளது. அதனால் முன்னெப்போதும் இல்லாத சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். (ம-7)

## ஐஸ் போதைப்பொருள்; யாழில் நால்வர் கைது

யாழ்ப்பாணத்தில் உயிர்கொல்லி போதைப்பொருட்களுடன் 20 வயதுக்கு உட்பட்ட நான்கு இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நால்வரும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்.நகரை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்கள். அவர்கள் 19 மற்றும் 20 வயதுடையவர்கள். அவர்களிடம் இருந்து 4 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும், அதனை பயன்படுத்தும் இதர போதைப்பொருட்களை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நால்வரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** கார்கில்ஸ் - மானிப்பாய், கொமர்ஷல் வங்கி - மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவிலடி மானிப்பாய், மானிப்பாய் மருத்துவமனை, மானிப்பாய் சந்தை, மேதர், மானிப்பாய் அரசடி சந்தி, சங்கானை, சங்கானை சந்தை, நிச்சாமம், வல்லை வீதி- சங்கானை 55 ஆம் பிரிவு இராணுவ முகாம், கட்டைக்காடு, தாளையடி ஐஸ் தொழிற்சாலை, J.K.W.S.S.P Site Office- தாளையடி, ஆழியவளை, Chundikkulam nature Park , கட்டைகாடு, கட்டைகாடு இராணுவ முகாம் (55ஆம் பிரிவு),கேவில் முள்ளியான், தாளையடி, நாவலடிச் சந்தி, மருதங்கேணி, உடுத்துறை, வத்திராயன், வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி முள்ளியன் இராணுவ முகாம், வெற்றிலைக்கேணி கடற்படைமுகாம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** மாசார், சோரன்பற்று, கணேசபுரம், முத்து விநாயகபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## பாவனைக்கு உதவாத ஜூஸ் அழிக்க நீதிமன்றம் உத்தரவு

ஒருவருட கால முடிவுத் திகதியிடப்பட்டு யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் விநியோகிக்கப்பட்ட ஜூஸ் பக்கெட்களை அழிக்குமாறு, மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேசத்திலுள்ள ஜூஸ் உற்பத்தி நிலையம் ஒன்றில் முன்கூட்டியே அச்சிடப்பட்ட ஒரே உற்பத்தி மற்றும் முடிவுத் திகதி இடப்பட்டு தயாரிக்கப்பட்ட ஒரு தொகை ஜூஸ் பக்கெட்களை, 16 குளிரூட்டிகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையில் பொதுசுகாதார பரிசோதகரினால் கைப்பற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து மேலதிக விசாரணைகளை அடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

"குழந்தைகள் பருகும் ஒரு சில வாரங்களே காலவதித் திகதி இடக்கூடிய ஜூஸ் பக்கெட்களை ஒரு வருட காலப்பகுதி குறிப்பிட்டு குடா நாட்டின் பல இடங்களில் விற்பனை செய்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனால் குழந்தைகளுக்கு தொற்று நோய்கள் மாத்திரமின்றி நீண்ட காலத்தின் பின் புற்றுநோய் போன்ற நோய்களும் ஏற்படும் அபாய நிலை காணப்படுகிறது" என பொதுசுகாதார பரிசோதகரால் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்யப்பட்டது.

அதனை அடுத்து , மன்று அனைத்து ஜூஸ் பக்கெட்களையும் அழிக்க உத்தரவு பிறப்பித்ததுடன், யாழ்ப்பாண மாவட்டத்தின் இதர பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்ட சகல ஜூஸ் பக்கெட்களையும் மீள பெற்று அழிக்குமாறும் உத்தரவிட்டது. (ம-7)

## காலாவதியான உணவுப் பொருள் தெல்லிப்பழையில் 6 உணவக உரிமையாளர்களுக்கு தண்டம்

(யாழ்ப்பாணம்)

உணவகங்களில் திகதி காலாவதியான உணவுபொருட்களை வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கு எதிராக உணவக உரிமையாளர்களுக்கு எதிரான வழக்குகளில் 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் கடந்த இரு வாரங்களாக மேற்கொண்ட பரிசோதனைகளில், காலாவதி திகதி முடிவுற்ற மற்றும் தவறான உணவுப்பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்த 6 உணவக உரிமையாளர்களுக்கு எதிராக நேற்று முன்தினம் வியாழக்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைகளின் போது , உணவக உரிமையாளர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து , 6 பேருக்கும் தலா 02 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் தண்டம் நீதிமன்றினால் விதிக்கப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரின் இனம் சாரா அரசியல் ஒன்பதாவது குடியரசுத் தலைவராக

## இலங்கை வம்சாவளித் தமிழர் தர்மன் தெரிவு

06

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



சாதாரணமாக கேள்விப்படாத பலவிதமான தண்டனைகளை இளம் வயதிலேயே பெற்றிருக்கிறார் லீ குவான் யூ.

தனது தாய் வழி தாத்தாவின் வீட்டில் இருந்தபோது, 'விலை உயர்ந்த பொருள் ஒன்றை லீ வீணாக்கிவிட்டார். விபரம் லீயின் தந்தை சின் குவானுக்குத் தெரிய வந்தது. அவர் லீயைத் தூக்கிக் கொண்டு கிணறுவரை சென்றுவிட்டார்.

இனி எப்போதாவது தவறு செய்தால் கிணற்றில் போட்டு மூடிவிடப் போவதாக எச்சரித்தார். சிறுவனான லீ குவான் யூ அச்சத்தில் உறைந்திருந்தார். குறும்பு செய்வதைக் குறைத்துக் கொண்டார். அதேநேரத்தில், தண்டனைகள் கடுமையாக இருந்தால் குற்றங்கள் குறைந்துபோகும் என்பது அவரது மனதில் ஆழப் பதிந்து போனது.

### பிரம்படிகள்

இன்று சிங்கப்பூரில் பிரம்படிகள் கொடுப்பது, கடுமையாக அபராதம் விதிப்பது, ஊழல் அதிகாரிகளைக் கடுமையாகத் தண்டிப்பது போன்றவையெல்லாம் இதன் எதிர்வினைகள்தாம். நாட்டின் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு இளம் வயதில் கற்றுக் கொண்ட பாடங்களை அமுல்படுத்தும் விதமாக, விதிமீறல்களுக்குக்கு பிரம்படி உள்ளிட்ட கடுமையான தண்டனைகளை வழங்கும் முறையை லீ அடுல்படுத்தினார். ஆனால், இந்த தண்டனைகள் மனித உரிமைக் குழுக்களால் இன்னும் தொடர்ச்சியான விமர்சனங்களுக்கு உள்ளாகியும் வருகின்றன.

### ஒழுக்கமில்லாவிட்டால் எந்தவிதமான இலக்கையும் அடைய முடியாது

ஊழலால் நாட்டின் முன்னேற்றம் பாதிக்கப்படும் என்பதைப் புரிந்து கொண்ட அவர், அதற்காகவே அதிக அதிகாரங்களைக் கொண்ட கண்காணிப்பு அமைப்பையும் நிறுவினார். ஒழுக்கமில்லாவிட்டால், எந்த விதமான இலக்கையும் அடைய முடியாது என்பது அவரது எண்ணம்.

அதையே ஆட்சியிலும் அவர் அமுல்படுத் தினார். 1980 களில் தனது மூத்த அமைச்சர் மீது ஊழல் புகார் எழுந்தபோது அதை விசாரிப் பதற்கு லீ உத்தரவிட்டார். அது தெரிந்தவுடனேயே அந்த அமைச்சர் தற்கொலை செய்து கொண்டார். அந்த அளவுக்கு லீ கண்டிப்பானவராக இருந்தார்.

### போராட்டங்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள்

சிங்கப்பூரில் போராட்டங்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கின்றன. முறையான அனுமதி பெறாமல், மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் போராட்டம் நடத்தினால் கைது செய்யப்படுவார்கள். தேவைப்பட்டால் விசாவை ரத்து செய்து நாடு கடத்தி விடுவார்கள்.

### லீ குவான் யூ கம்யூனிஸ்டுகளுக்கு எதிரானவர்

சிங்கப்பூரைக் கட்டியமைத்த லீ குவான் யூ கம்யூனிஸ்டுகளுக்கு எதிரானவர். ஆனால் தொழிலாளர்களுக்கு எதிராக அவர் ஒருபோதும் நடந்து கொண்டதே கிடையாது என்கிறார்கள். 1950களில் தொழிலாளர்களை ஒருங்கிணைப்பதற்காகவும் அவர்கள் வேலை நிறுத்தம் செய்து உரிமைகளைப் பெறுவதற்காகவும் ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்.

போராட்டம் என்பது அரசின் கவனத்தைக் கவருவதாக இருக்க வேண்டுமேயன்றி ஒருபோதும் வன்முறைக்கு இடமளிக்கக்கூடாது என்று லீ குவான் யூ வலியுறுத்துவார். வன்முறைகளைத் தூண்டிவிட பலர் முயற்சிப்பார்கள். அதற்குத் தொழிலாளர்கள் பலியாகிவிடக் கூடாது என்று லீ குவான் யூ எச்சரிப்பார். அந்த வழிமுறையையே சிங்கப்பூர் இன்றும் பின்பற்றி வருகிறது.

### சிங்கப்பூர் 63 தீவுகளை உடையது

சிங்கப்பூர் 63 தீவுகளை உடையது. இதில் பெரிய முதன்மை தீவு சிங்கப்பூர் தீவென அழைக்கப்படுகிறது. மலேசியாவின் ஜொகூர் மாநிலத்துடன் இரண்டு சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளது. வடக்கில் உள்ள இணைப்பு சாலைக்குப் பெயர் ஜொகூர்-சிங்கப்பூர் காசுவல்வே. மேற்கில் உள்ள இணைப்பு சாலைக்கு டுவசு என்று பெயர். சந்தோசா, புளாவ் மேகோங்ர புளாவ் யுபின், ஜுரோங் தீவு ஆகியவை மற்ற குறிப்பிடத்தக்க தீவுகள் ஆகும்.

கடலிலிருந்து நிலத்தை மீட்கும் திட்டம் செயலில் உள்ளது. இதன் காரணமாக 1960 இல் 581.5 ச. கிமீ (224.5 சதுர மைல்) இருந்த நிலப்பரப்பு தற்போது 704 ச.கிமீ (272 சதுர மைல்) ஆக உள்ளது. 2030 ஆம் ஆண்டில் மேலும் 100 ச.கிமீ நிலம் மீட்கப்பட்டு விடுமென எதிர்பார்க்கப்படுகிறது. சில நிலமீட்பு திட்டங்களில் சிறிய தீவுகள் ஒன்றிணைக்கப்பட்டு பெரிய தீவு உருவாக்கப்படுகின்றன. நகரமயமாக்கல் பெரும்பாலான முதன்மை மழைக் காடுகளை அழித்து விட்டாலும் 5% நிலமானது இயற்கை காடுகளாகப் பாதுகாக்கப்படுகிறது. புகிட் திமா என்பது குறிப்பிடத்தகுந்த அழிக்கப்படாத காடாகும்.

### சிங்கப்பூர் உலகின் நான்காவது முன்னணி நிதி மையம்

சிங்கப்பூர் உலகின் நான்காவது முன்னணி நிதி மையமாகவும் சூதாட்டத்திற்கான இரண்டாவது பெரிய சந்தையாகவும் திகழ்கிறது. அதிக பொருட்களைக் கையாளும் உலகின் முன்னணித் துறைமுகங்களில் சிங்கப்பூர் துறைமுகமும் ஒன்றாகும். உலக வங்கி வணிகம் செய்வதற்கு கட்டுப்பாடுகள் மிகக் குறைந்த இடம் எனச் சிங்கப்பூரைத் தெரிவு செய்துள்ளது. இதைச் சிறந்த தளபாடங்கள் மையம் எனவும் வரிசைப்படுத்தியுள்ளது. லண்டன், நியூயோர்க், டோக்கியோவிற்கு அடுத்து சிங்கப்பூர் நான்காவது பெரிய வெளிநாட்டு நாணய பரிமாற்ற மையமாகும்.

சிங்கப்பூர் பண்பாடு ஒரு கலப்புப் பண்பாடு. மலாய் மக்கள், தமிழர், சீனர், அரபு நாட்டினரின் பண்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. சிங்கப்பூரின் வெற்றிக்கும் அதன் தனித்துவத்துக்கும் சமய, இன நல்லுறவு அரசாங்கத்தில் முக்கிய காரணமாக அதன் சமய, இன நல்லுறவுக் கொள்கை முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 42 விழுக்காடு வெளிநாட்டினராக உள்ளனர். அவர்கள் சிங்கப்பூரின் கலாசாரத்தில் பாரிய செல்வாக்குச் செலுத்துகின்றனர்.

### சிங்கப்பூரின் மக்கள் தொகை

2011 ஆம்ஆண்டின்படி சிங்கப்பூரின் மக்கள் தொகை 5.18 மில்லியன் ஆகும். இதில் 3.25 மில்லியன் (64%) மக்கள் சிங்கப்பூர் நாட்டின் குடியுரிமம் பெற்றவர்கள். மேலும் உலகளவில் ஒரு நாட்டின் சனத் தொகையில் அதிக வெளிநாட்டினரைக் கொண்ட நாடுகளில் 6 ஆம் இடத்தை வகிக்கிறது. இவர்கள் தொழிலாளர்களாகக் காணப்படுகின்றனர். 2009 கணக்கெடுப்பின்படி சீனர்கள் 74.2%மாகவும் மலாயர் 13.4%மாகவும் இந்தியர் 9.2%மாகவும் உள்ளனர்.

2010ஆம் ஆண்டுக்கு முன்பு சிங்கப்பூர் மக்கள் தங்களை ஏதாவது ஒரு இனத்தை சார்ந்தவர்களாகத் தான் குறிப்பிடமுடியும். இயல்பாகத் தந்தையின் இனத்தையே மகனோ அல்லது மகள் சார்ந்ததாக அரசு பதிவேட்டில் குறிப்பிடப்படும். இதனால் அரசு கணக்கின் படி பல்லின கலப்பு மக்கள் இல்லை என்றே இருக்கும். 2010 இற்கு பின்பு இரு இனங்களை சார்ந்தவர் எனப் பதிவு செய்யும் முறை நடைமுறைக்கு வந்தது. நிலப்பற்றாக்குறையால் அரசு நிதியுதவி பெற்ற அடுக்கு மாடி வீட்டு மனைகளை வீட்டுவசதி வாரியத்தின் மூலம் மக்களுக்கு வழங்குகிறது. குழந்தை பிறப்பு குறைவாக உள்ள நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்று.

சிங்கப்பூர் பல மதங்கள் கொண்ட ஒரு நாடு. 33% சிங்கப்பூர்வாசிகள் பௌத்தத்தையும் 18% மக்கள் கிறித்துவத்தையும் பின்பற்றுகின்றனர். எந்த மதமும் சாராதவர்கள் 17% உள்ளனர். 15% மக்கள் இஸ்லாம் மதத்தினைப் பின்பற்றுகின்றனர். இஸ்லாமை பின்பற்றுபவர்கள் பெரும்பாலும் மலாய் மக்கள் ஆவர். டாவோயிசத்தை 11% மக்கள் பின்பற்றுகின்றனர். சிறுபான்மை மக்கள் பலர் இந்து சமயத்தையும் சீக்கிய சமயத்தையும் பின்பற்றுகின்றனர். பௌத்த சமயத்தையும் டாவோயிசத்தையும் பெரும்பாலும் சீனர்களே பின்பற்றுகின்றனர். இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்களில் பெரும்பாலோர் இந்தியர் ஆவர்.

பௌத்தத்தின் மூன்று பிரிவுகளான மகாயானம், வஜ்ராயணம், தேரவாதத்திற்கு இங்கு மடங்கள் உண்டு. பெரும்பாலோர் மகாயாணத்தை பின்பற்றுகின்றனர். சீன மகாயாணமே இங்கு பெரும்பாலானவர்களால் பின்பற்றப்படுகிறது. ஆங்கிலம், மாண்டரின், மலாய், தமிழ் ஆகியவை சிங்கப்பூர் அரசின் ஏற்புடைய மொழிகளாகும். சிங்கப்பூர் விடுதலை அடைந்தது முதல் ஆட்சி மொழியாக ஆங்கிலம் வளர்க்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரர்களில் சுமார் 100,000 பேர் அல்லது 3 விழுக்காட்டினர் தமிழை தங்கள் சொந்த மொழியாகப் பேசுகின்றனர்.

### சிங்கப்பூரின் தேசிய மொழி மலாய்

சிங்கப்பூரின் தேசிய மொழி மலாய். சிங்கப்பூரின் தேசிய கீதம் மலாய் மொழியில் இயற்றப்பட்டுள்ளது. மலாய் தேசிய மொழியாக இருந்தாலும் நடைமுறையில் ஆங்கிலத்துக்கே அரசு முக்கியத்துவம் கொடுக்கிறது. அண்டை நாடுகளான மலேசியா, இந்தோனேசியா போன்றவற்றில் மலாய் தேசிய மொழியாக உள்ளதால் அண்டை நாடுகளுடன் சச்சரவுகளைத் தவிர்க்க மலாயை தேசிய மொழியாகக் கொண்டுள்ளது.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

இதில் சி.தினேசன் என்பவரே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

பட்டாரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## இணைய...

மாத்திரம் இவ்வாறான 150 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக நிறுவனத்தின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ஷருக்க தமுனுபொல குறிப்பிட்டார்.

தொழில் பெற்றுத்தருவதாகக் குறிப்பிட்டு சட்டவிரோதமான முறையில் அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், கடவுச்சீட்டுகளின் பிரதிகள் மோசடிக்காரர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பொதிகள், பரிசில்கள் தங்களிடம் உள்ளதாகவும், அதனை பெற்றுக் கொள்ளுமாறு குறுஞ்செய்திகளை அனுப்பி நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் மிகவும் பாதுகாப்பாக செயற்படுமாறும், தனிப்பட்ட தரவுகளை வெளியிட வேண்டாமெனவும் பொதுமக்களை கேட்டுக்கொள்வதாக சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ஷருக்க தமுனுபொல அறிவுறுத்தினார். (ம-7)

## பால்மாவுக்கான...

அமுலுக்கு வந்தது.

எவ்வாறாயினும், உள்ளூர் சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்படமாட்டாது எனவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## உயிர்த்த...

நேற்று கருத்துரைக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அதிகாரிகள் யாரேனும் கடமைகளை செய்யாவிட்டால் பாராளுமன்றுக்கு அவர்கள் அறிவித்திருக்க வேண்டும்.

இதன் பின்னணியில் அரசியல் காரணம் தான் உள்ளது.

2015இல் இல்லாதுபோன அதிகாரத்தை மீண்டும் கைப்பற்ற ராஜபக்ஷக்கள் முயற்சித்தார்கள்.

மீண்டும் புலிகள் வரப்போவதாகக் கூறினார்கள். ஆனால், 2017 இற்கு பின்னர் அந்தக் கதை அப்படியே மறைந்து விட்டது. இதன் பின்னர், முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்தார்கள். சிங்கள மக்களுக்காக கருக்கலைப்பு கொத்து வழங்கப்பட்டதாகக் கூறினார்கள்.

கருக்கலைப்புச் செய்யும் ஆடை உள்ளதாகக் கூறினார்கள். எங்கே இப்போது இவைகள் எல்லாம் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக மாறிவிடுவார்கள் என்றும்கூட பிரசாரம் செய்தார்கள். சனல் 4 ஆவணப்படம் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

இதுதொடர்பாக கேட்டால் ராஜபக்ஷக்களுடன் சனல் 4க்கு கோபம் உள்ளதாகக் கூறுகிறார்கள். நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையும்தானே செய்தி வெளியிட்டது. அப்படியென்றால் இந்தப் பத்திரிகையும் இவர்களுடன் பகையில் தானா உள்ளது? நிருபமா ராஜபக்ஷ தொடர்பாக பண்டோரா ஆவணங்கள் வெளியிடப்பட்டன. இந்த ஆவணத்தை வெளியிட்ட சர்வதேச நிபுணர்களும் ராஜபக்ஷவினருடன் கோபத்திலா உள்ளார்கள்?

எனவே சனல் 4, ராஜபக்ஷக்களுடன் பகை எனக்கூறுவது, உண்மையை மறைக்க எடுக்கப்படும் நடவடிக்கையாகவே கருதப்படுகிறது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## நினைவேந்தலை...

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை கோரி சட்டமா அதிபர் திணைக்களத்தின் விசேட குழுவினால் யாழ்.நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளை அடுத்து நினைவேந்தலுக்கு தடை விதிக்க நீதிமன்று மறுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதிக்கக்கோரி, கொழும்பில் இருந்து ஹெலி மூலம் யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை வருகை தந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் விசேட குழுவினர்கள் மனுவை தாக்கல் செய்தனர்.

மனு மீதான விசாரணைகள் நேற்று வெள்ளிக்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மன்று நினைவேந்தலுக்கு தடை விதிக்க மறுத்துள்ளது.

தடை கோரி மனுதாரர்கள் விண்ணப்பம் செய்தபோது, நினைவேந்தலின்போது வன்முறை சம்பவங்கள் இடம்பெறலாம் என்ற விடயத்தை பிரதானமாக சுட்டிக்காட்டி இருந்தனர்.

அவ்வாறு எவரேனும் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டால், அவர்களை உடனடியாக பொலிஸார் கைது செய்ய முடியும் என நீதிமன்று தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் நினைவேந்தலுக்கு தடை கோரி, யாழ்ப்பாண பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த புதன்கிழமை நீதிமன்றினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

அந்நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் இருந்து வந்த குழுவினால் மீள மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த விசேட குழுவில் பொலிஸ் சட்டப் பிரிவு பணிப்பாளர் காளிங்க ஜெயசிங்க, சிரேஷ்ட அரச சட்டவாதி சமிந்த விக்கிரம உள்ளிட்டவர்கள் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## அமை...

தியாகதீபம் திலீபன் நினைவு நிகழ்வுகள், ஊர்திபவனிகளை நடத்துவதன் மூலம் வன்முறைகள் உருவாகும் சூழல் நிலவுவதாக குறிப்பிட்டு பருத்தித்துறை பொலிஸார் குறித்த மனுவை தாக்கல் செய்தனர்.

வன்முறையில் யாராவது ஈடுபட்டால் அவர்களை கைது செய்ய பொலிஸாருக்கு அதிகாரமுள்ளதை சுட்டிக்காட்டிய பருத்தித்துறை நீதவான், அமைதியான நினைவு நிகழ்வுகளைதடுக்க முடியாதென உத்தரவிட்டார்.

1987 செப்ரெம்பர் 15 முதல் செப்ரெம்பர் 26ஆம் திகதிவரை தியாக தீபம் திலீபன் ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நல்லூரில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் நீத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## ஐ.நா செயலாள...

யில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நியூயோர்க்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (ம-7)

## துப்பாக்கிச் சூடு...

தல்துவ தெரிவித்துள்ளார்.

அவற்றில் பெரும்பாலானவை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளால் பழிவாங்கும் கொலைகள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார்.(ம-7)


நாகபூஷணி அதிர்ஷ்ட அலையுடன்

நாகபூஷணி அதிர்ஷ்ட அலையுடன் பிரதான முகவர்கள் **கனகலிங்கம் திலகவதி** ஊடாக 21.09.2023 **லக்கி 7** லொத்தரில் **100000 /=** **அதகோடிபதி** லொத்தரில் **100000/=** ரூபாயும் யாழ்.நகரில் வெல்லப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். (17194)

மெகா பவர்
திகதி 22/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1593
X 15 38 44 48 78
34683

தன நிதானய
திகதி - 2023.09.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1275
C 09 21 57 73 C
15922

Lucky 7
திகதி 22.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0071
L7 இலக்கம் 3 3
வெற்றி இலக்கினம் / வெற்றி இலக்கங்கள்
மேஷம் 3 0 6 0 1 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3487
சீட்டிழுப்பு திகதி 22.09.2023
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 31 36 62 67
T 29853

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.22
சீட்டிழுப்பு இலக்கம் 554
தனுசு 06 11 35 55 தனுசு

மஹஜன சம்பத
திகதி 2023/09/22
சீட்டிழுப்பு இலக்கம் 5245
D 3 8 0 6 7 9

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2219
வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.09.22
தினம் வெள்ளிக்கிழமை
11 12 29 43 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,244,740.40
12724 639

சனிதா
திகதி 2023.09.22 வெற்றி வாரம் 4380 வர்ணம் செம்மஞ்சள்
10 15 20 54 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,305,248.00
86859 877

சசிரி
வெற்றி வாரம் 379
சீட்டிழுப்பு திகதி 2023.09.22
பச்சை
03 23 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,166,560/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3931
வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.22
தினம் வெள்ளிக்கிழமை
01 05 13 59 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,205,728/-
58149 426

திகதி 2023.09.22 வெற்றி வாரம் 1395
U 17 09 28 36 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 443,129,764.20
16509 913
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2045
சீட்டிழுப்பு திகதி : 2023.09.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,398,176/-
01 30 63 70 W
96931 987


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரை சேர்ந்த பேரா. மாணவன் மரணம்

பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடைய பல்கலைக்கழக மாணவர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவ பீடத்தில் முதலாம் ஆண்டில் கல்வி கற்று வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர், அவரின் அறையின் குளியலறையில் விழுந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மாணவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


## வேலையாட்கள் தேவை

- மேசன் (சம்பளம் 2000 – 2500)
- மேசன் உதவியாளர் (சம்பளம் 2000)
- தச்சு வேலை தெரிந்தவர்கள்
- தச்சு வேலை உதவியாளர்
- வெல்டர்
- வெல்டர் உதவியாளர்
- பெயின்ரர்

தொடர்புக்கு : காலை 8.00 மணி தொடக்கம் 5.30 மணிவரை

**077 2100 749** (17136)

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

யாழ் – கொழும்பு 2,900/=

வடமராட்சி – கொழும்பு 2,700/=



(17019)

T.P: **077 544 8503**

## வேலையாட்கள் தேவை

- சிற்றுண்டி தயாரிப்பவர் ஆண்/ பெண்
- உணவு பரிமாறுபவர் ஆண்/ பெண்
- சமையல் உதவியாளர் ஆண்/பெண்
- யூஸ் தயாரிப்பவர் ஆண்/பெண்

(17200)

**076 166 1986**
**070 664 7466**

## IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes

இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.

077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17142)

## வீடு பராமரித்தல், வீட்டு வேலைகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: (17190)

**074 325 7713**

## வகுப்பு

தரம் 01 - 03 வரை வகுப்புக்களும் 06 – 09 வரையான வரலாறு மற்றும் குடியியல் வகுப்புக்களும் வீட்டில் நடைபெறுவதோடு நேரடியாக வந்தும் கற்பிக்கப்படும். (17196)

**074 179 3394**

## காணி விற்பனைக்கு

புத்தூர் மேற்கு நவற்கிரி சந்திக்கு அருகில் 14 பரப்பு தோட்டம் விற்பனைக்கு. இரண்டு பேர் இரண்டாக்கி வீடும் கட்டலாம். (17195)

**077 706 6487**

## விற்பனைக்கு

- லயன் (lion) பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
- வாழைக்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

(17185)

**077 172 1074**

## கடை வாடகைக்கு தேவை

யாழ் நகரப் பகுதியில் (மத்தியில்) கடை வாடகைக்கு தேவை. (17184)

**077 082 1010**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 78 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு

**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

(17189)

## அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு

- நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
- இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்



(C-7310)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

V2 TRAVELS - 0777-068-777

## CANADA VISITOR VISA



VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7310)

**0777-068-777**

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பின்புறமாக கண்ணகை அம்மன் கோவிலிற்கு தெற்கு புறமாகவும் வெள்ளெருக்கு பிள்ளையார் கோவிலிற்கு செல்லும் வீதியில் நல்ல அயல் சூழலில் 6 பரப்பு சதுர காணி விற்பனைக்கு (2 பரப்பாகவும் கொடுக்கப்படும்) (16461)

**076 654 5987**

## ரைக்ரர் சாரதி தேவை

சாரதி அனுமதிப் பத்திரமுடைய நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

காலை 8.00 மணி தொடக்கம் 5.30 மணிவரை (17136)

**077 2100 749**

## உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக தெளிவூட்டல் கருத்தரங்குகள்

உள்ளூராட்சி மன்றங்களினால் 2021 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில், உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் (LDSP) கீழ் வடமாகாணத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் 2023/2024 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைகள் தொடர்பில் பொதுமக்கள் தமது கருத்துக்களை பின்வரும் இரு தினங்களில் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் தலைமை அலுவலகங்களில் நேரடியாக வழங்கலாம்.

கருத்தறிதலுக்கான

1 வது கூட்டம் : 25.09.2023 (திங்கட்கிழமை)
2 வது கூட்டம் : 30.09.2023 (சனிக்கிழமை) } பி.ப 2.00 மணி

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விபரங்களை எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து

உள்ளூராட்சி மன்றங்களின் தலைமை, உப அலுவலகங்கள் மற்றும் நூலகங்களிலும்

வடமாகாண சபையின் www.np.gov.lk என்ற இணையத்தளத்திலும்

பொதுமக்கள் பார்வையிட்டு, தமது கருத்துக்களை உரிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்க முடியும்.

வேலைகள் குறித்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதற்கான கூட்டம் 06.10.2023 வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் தலைமை அலுவலகங்களில் இடம்பெறும்.

உள்ளூராட்சி ஆணையாளர்,
வடமாகாணம். (C-7302)

23.09.2023

## விவசாயிகளுக்கு

இந்தோனேசியாவிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளி கருவி 16 லீற்றர் (Sprayer) சில்வர், பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவியினை உத்தரவாதத்துடனும் விசேட விலைக்கழிவுடனும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (17182)



ஆர்க் என்ரபிறைசஸ்

102, K.K.S, யாழ்ப்பாணம் 021 222 3155
150, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள், A9 வீதி. 070 191 3571
Hot Line : 071 535 7799/ 071 973 9917

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7273)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org